இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 19 திகதி: 14.10.2018 விலை : 20.00

## இளையோரிடம் உருவாகும் ஆர்வமும் உணர்வுகளும் திருஅவையையும் இவ்வுலகையும் நிரப்புகிறது

### உலக ஆயர்கள் மாமன்ற அமர்வில் திருத்தந்தை பிரான்சிஸ்



உலக ஆயர்கள் மாமன்றம் ஒக்ரோபர் மாதம் 3ம் திகதி வத்திக்கானில் ஆரம்பமாகியுள்ள நிலையில் அதன் முதல் நாள் நிகழ்வில் தொடக்கவுரை ஆற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக ஆயர்கள் மாமன்ற அரங்கத்தில் கூடியிருந்த கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், துறவிகள் மற்கும் பொதுநிலையில் மத்தியில் அவர்களை வரவேற்று உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒவ்வோர் அமர்விலும், ஐந்து பேர் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட பின்னர், ஏறத்தாழ மூன்று நிமிடம் அமைதி காத்து செபிப்போம் என்று கேட்டுக்கொண்டார்

இளையோரிடம் உருவாகும் ஆர்வமும், உணர்வுகளும் இந்த மன்றத்தை மட்டுமல்ல, திருஅவையையும்,

( தொடர்ச்சி 2ம் பக்கம்)

## உலக மறைபரப்பு ஞாயிறு தினத்தில் பாப்பிறை மறைபரப்பு சபைகளின் யாழ் மறைமாவட்ட இயக்குநர்

### அருட்பணி. எயின்சிலி றொஷான் அடிகளார்



உலக மறைபரப்பு ஞாயிறு 21.10.2018 ஞாயிற்றுக் கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது. "அன்பினால் நற்செய்தியை மலரச்செய்வோம்" என்னும் கருப்பொருளில் உலக மறைபரப்பு ஞாயிறு தினத்தை நாம் கொண்டாடுகின்றோம். கிறிஸ்து நமக்காக தன் உயிரைக் கொடுத்து அன்பின் உன்னதத்தை உலகறியச் செய்தார். இத்தகைய அன்பின் வடிவான கிறிஸ்து நம்மையும் அன்பு செய்கின்றார். அவ்வன்பின் நற்செய்தியை எம் சொல்லாலும், செயலாலும் முன் மாதிரிகையான வாழ்வினாலும் சான்றுபகர கிறிஸ்தவர்களாகிய நாம் அழைக்கப்படுகின்றோம்.

மறைபணியாளர்கள் விண்ணரசை மண்ணரசில் நிலைகொள்ளச் செய்வதற்காக அன்போடு நற்செய்திப் பணியை மேற்கொள்ள அழைக்கப்படுகின்ற இந்நேரத்தில் மறை பணியாளர்கள் மட்டுமன்று, ஏனைய திருநிலையினரும் பொதுநிலையினரும் இத்தகைய மறைபரப்புப் பணியை சிறப்பாக மேற்கொள்வது கிறிஸ்தவர்களாகிய எமது கடமையும் அருள்வாழ்வை பெற்றுக்கொள்வதற்கான வழியுமாகும்.


அழிந்துபோகும் இவ்வுலக செல்வங்களை விடுத்து, வாழ்வு தரும் வார்த்தைகளை அனைவர் மீதும் பொழிந்து நாமும் இயேசுவில் வாழ்ந்து பிறரையும் இறை விசுவாசத்தில் வாழ வைப்போம்.

## இம்மாதம் குருத்துவத்தில் பொன்விழாக் காணும் எம் குருக்கள்



**அருட்பணி. அ.பா.தேவசகாயம்**

இறைவனின் குருவாக
இறைமக்களின் சகாயமான
அருட்பணி தேவசகாயம் அடிகள்
மடுத்திருத்தலத்தின் பரிபாலகராய்
போர்க்காலத்தில் கிளிமுல்லை
மறைக்கோட்ட முதல்வராய்
இன்னலுற்ற மக்களுக்கு
ஆற்றிய மகத்தான பணிகள்
மண்ணெங்கும் இன்றும்
மணம் வீசும் காண்
மூத்தகுரு பொன்விழா நாயகன்
என்றும் பொன்னாக ஒளிர
வாழ்த்துகின்றோம்...



**அருட்பணி. பி. டானியல் (அமதி)**

அமதி நந்தவனத்தின் அருங்குரு
அமதி குருமடங்களின் அதிபராக
மறை உரைஞராக
உளவள ஆலோசகராக
பன்முக ஆளுமை பெற்ற
இறைவனின் கொடை
அமைதிச் சோலையை
செழிக்கச் செய்யும்
வான்மழையான
இவர் பணிகள்
பொன்னாக ஒளிர்ந்து
காலத்தில் தொடர
வாழ்த்துகின்றோம்...

## குருத்துவத்தில் வெள்ளிவிழாக் காணும் எம் குருக்கள்



**அருட்பணி. எரிக் ஹொஷான்**

குருத்துவத்தில் வெள்ளி நாயகன்
யாழ் மறைமாவட்டம்
நிதிவளத்தில் நின்றுயர
தன்னை உருக்கி உழைத்த
உத்தமர்
பணித்தளங்களில் பணிக்குருவாக
பாங்குறவே பணிசெய்து
மக்கள் மனங்கனை
வெற்றிகொண்ட
சேவையின் சிகரத்தை
வாழ்த்துகின்றோம்
வெள்ளிவிழா நாளன்று...



**அருட்பணி.
அன்ரன் ஞானப்பிரகாசம்**

ஞானப்பிரகாசமாய்
திருஅவையில் ஒளிர்ந்து நின்று
மறைமாவட்டப் பங்குகளில்
மகத்தான பணிகள் செய்து
புலம்பெயர் எம் மக்களின்
விசுவாசம் குன்றிடாது
ஆன்மீகத் தாகம் தீர்க்க
அலைகடல் கடந்து
அலையென்வே பணிசெய்யும்
அருட்குருவே நீர் வாழ்க....

## கிளறீசியன் சபைக்கு புதிய குருக்கள்

அமல மரியின் மறைபோதக மைந்தர்கள் (கிளறீசியன் சபை) துறவற குழுமத்தினைச் சேர்ந்த மூன்று திருத்தொண்டர்கள் புதிய குருக்களாக, அமலமரியின் மறைபோதக மைந்தர்கள் (கிளறீசியன் சபை) துறவற குழுமத்தின் ஸ்தாபகர் புனித அந்தோனி மரிய கிளாரடின் திருவிழா தினமாகிய ஒக்ரோபர் மாதம் 24ம் திகதி அன்று காலை 10.00 மணிக்கு யாழ் ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானபிரகாசம் ஆண்டகை அவர்களால் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.



**திருத்தொண்டர் எ.கி.பரிங்ரன் லீனஸ்**

சில்லாலை புனித கதிரை மாதா ஆலய பங்கு திருச்சபையை சேர்ந்த இவர் திரு. திருமதி. எட்வேட் கிறிஸ்ரி மேரி றோஸ் மலர் தம்பதியினரின் ஐந்தாவது மகனாவார். ஆரம்ப கல்வியை சில்லாலை றோ.க.த.க பாடசாலையிலும் இடைநிலை கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் உயர்தர கல்வியை யாழ் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும் கற்ற இவர், இந்தியா மதுரை அருளானந்தர் கல்லூரியில் மெய்யியலையும் கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கற்கை நெறியினையும் நிறைவு செய்து குருநாகல் காசா கிளாரட் நவசந்நியாச இல்லத்தில் தனது நவசந்நியாச பயிற்சியை மேற்கொண்டார். இவர் தனது முதல் திருப்பலியை 27.10.2018 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில்ஒப்புகொடுக்கவுள்ளார்.



**திருத்தொண்டர் சே.தியூசியஸ்**

மன்னார் - முத்தரிப்புத் துறை புனித செங்கோல் மாதா ஆலய பங்கு திருச்சபையை சேர்ந்த இவர், காலம் சென்ற திரு. யோசப் சேவியர், திருமதி. சூசையப்பு இருதய ராணி லெம்பட் தம்பதியினரின் இரண்டாவது மகனாவார் இவர் தனது ஆரம்ப கல்வியை முத்தரிப்புத்துறை றோ.க.த.க. பாடசாலையிலும் இடைநிலை மற்றும் உயர்தர கல்வியினை நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியிலும் கற்று, கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியல் இறையியல் கற்கை நெறிகளை நிறைவு செய்து குருநாகல் காசா கிளாரட் நவசந்நியாச இல்லத்தில் தனது நவசந்நியாச பயிற்சியை மேற்கொண்டார். இவர் தனது முதல் திருப்பலியை 26.10.2018 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மன்னார் முத்தரிப்புத்துறை புனித செங்கோல் மாதா ஆலயத்தில் ஒப்புகொடுக்கவுள்ளார்.



**திருத்தொண்டர் அ. அபிலஸ்**

நெடுந்தீவு புனித பற்றிமா ஆலய பங்கு திருச்சபையை சேர்ந்த இவர் திரு. திருமதி. அன்ரனி மதுரநா யகம் அமலோற்பவ மல்லிகா தம்பதியினரின் மூன்றாவது மகனாவார். இவர் தனது ஆரம்ப கல்வியை யாழ் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் இடைநிலை கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும், உயர்தர கல்வியை நீர்கொழும்பு, தோப்பு றோ.க.த.ம. வித்தியாலயத்திலும் கற்று, கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியல் இறையியல் கற்கை நெறிகளை நிறைவு செய்து குருநாகல் காசா கிளாரட் நவசந்நியாச இல்லத்தில் தனது நவசந்நியாச பயிற்சியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப் பலியை 28.10.2018 ஞாயிற்றுக் கிழமை காலை 9.45 மணிக்கு நெடுந்தீவு புனித பற்றிமா ஆலயத்தில் ஒப்பு கொடுக்கவுள்ளார்.

### புனித யோசவ் வாஸின் அற்புத சிலுவை

யாழ் மறைமாவட்டத்திற்கு திருப்பயணம் வரும் புனித யோசவ் வாஸின் அற்புத சிலுவையை திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகையிடமிருந்து யாழ் மறை மாவட்ட எல்லையாகிய தென்னைமரவாடியில் (அளம்பில். - திருகோணமலை எல்லைப்புறம்) வைத்து யாழ் மறை மாவட்ட யோசவ் வாஸ் செயற்குழுவினர் பொறுப் பேற்பர். (மேலதிக விபரம் 08ம் பக்கம்)

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## பரீட்சை முடிவுகள் எம் வாழ்வின் முடிவுகளா...?

தரம் ஐந்து புலமைச் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளது. இலங்கை கல்விக் கட்டமைப்பின் பரீட்சைகளில் மிகவும் முதன்மை வாய்ந்த பரீட்சையாக இப்பரீட்சை புதிய பரிணாமம் பெற்றுள்ளது. மாணவர்கள், பெற்றோர்கள் அவர் தம் உறவினர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் மட்டத்தில் எழுச்சியான எதிர்பார்ப்பு மிகுந்த எண்ணங்களையும், கற்பனைகளையும் ஆழிப்பேரலை (சுனாமி) போன்று எழச்செய்யும் சக்தி மிகு பரீட்சையாக, பரீட்சைப் பெறுபேறாக தரம் ஐந்து புலமைப் பரிசில் தடம்பதித்துள்ளமை நிதர்சனமாகும்.

இந்தப் பரீட்சைக்காக மாணவர்களை தயார்படுத்தல் தொடக்கம் பரீட்சை எழுதும் வரை இளஞ்சிட்டுக்கள் கற்பிக்கப்படுகின்றனரா? அல்லது கசக்கப்படுகின்றனரா? என வினாத்தொடுப்பின் கசக்கப்படுகின்றனர் என்பதே யதார்த்தமாகும். "கற்க கசடற" என்பதற்கு தவறாக சிலர் கொண்டுள்ள அர்த்தத்தின் விளைவோ என ஐயுறத் தோன்றுகின்றது. பூக்களை மிதித்துக்கொண்டு கிளைகளுக்கு வர்ணம் பூசுகின்ற எமது கல்விக் கொள்கைகள், நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டங்கள், அமுலாக்கப்படும் பரீட்சைகள் இளம் சந்ததியினரின் எதிர்கால வாழ்வில் ஒளிப்புள்ளிகளுக்குப் பதில் கரும்புள்ளிகளை குத்துகின்றதே தவிர, அவர் தம் வாழ்வை எந்தளவுதூரம் கட்டியெழுப்புகின்றது என்பது கேள்விக்குறியாகும்.

சுகப்பிரசவங்களுக்குப் பதில் அறுவைச் சிகிச்சைகளைத் தான் எமது பரீட்சைகள், எமது பரீட்சை முடிவுகள் கொண்டு வருகின்றது எனின் இளைய தலைமுறையினரின் அபாய சமிக்ஞைகளாகவே இப்பரீட்சையை நோக்கவேண்டி உள்ளது. இந்தக் கசப்பான உண்மையை கல்விச் சமூகம் ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும்.

பரீட்சை என்பது ஒரு பிள்ளையின் திறனை, ஆற்றலை, சுய சிந்தனையை மற்றும் ஆளுமையை வெளிக்கொணரும் ஒரு ஊடகமே தவிர வேறல்ல. எந்தவொரு பரீட்சை முடிவுகளும் ஒரு பிள்ளையின் ஒட்டுமொத்த வாழ்வின் நன்மை தீமையைத் தீர்மானிப்பதில்லை. பரீட்சைகள் வெறும் வெற்றி தோல்விகளை மட்டுமே நிர்ணயிக்கின்றன. வாழ்வின் வெற்றி என்பது இறைவனின் கைகளிலும், எமது முயற்சியிலும் தங்கியுள்ளது. எத்தனையோ பரீட்சைகளில் வெற்றிபெற்றவர்கள் வாழ்க்கையில் தோல்வியைத் தழுவியிருக்கின்ற வரலாறுகளை கண்கூடாகக் காண்கின்றோம்.

ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றிபெற்ற பிள்ளை க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் தோல்வி கண்ட வரலாறுகள் ஏராளம் உண்டு. அதேநேரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத பல பிள்ளைகள் உயர்தரப் பரீட்சைகளில் அதியுயர் சித்தி பெறுவதும், மாவட்ட தேசிய நிலைகளில் முன்னணி வகிப்பதும் வரலாற்றில் பதிவாகியுள்ளது.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியான போது இலங்கை ஜனாதிபதி அவர்கள் இந்தப் பரீட்சைப் பெறுபேறு மாணவர்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில்லை. எனவே இதையிட்டு பெற்றோர்கள், பிள்ளைகள், ஆசிரியர்கள் மிகுந்த கவனத்துடன் செயற்படவேண்டுமென கூறியிருந்தமை கோடிடப்படவேண்டியது.

ஆனால் நடப்பது என்ன? புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு வெளிவந்தவுடன் வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்ட பல விழாக்கள் எடுக்கப்படுகின்றன. பத்திரிகைகளில் விளம்பரங்கள் குவிகின்றன, இவை குறிப்பிட்ட மாணவரை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் எனினும் இது இரு பாதக விளைவுகளைத் தோற்றுவிக்கின்றது. ஒன்று வெற்றிபெற்ற மாணவன் வெற்றி மமதையில் தன் எதிர்காலத்தை தவற விடுகின்றான். மற்றொன்று தோல்வியடைந்த மாணவர்களின் மனங்களை இத்தகைய செயற்பாடுகள் காயப்படுத்துகின்றன. சித்தியடையாத பிள்ளைகளை பெற்றோர்கள் வசைபாடுவதும் சில பெற்றோர்கள் அதனை தமது மானசீகப் பிரச்சினையாக எடுத்து தவறான முடிவுகளுக்குச் சென்று மனநோய்வாய்ப்படுவதும் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றது.

"தோல்வி என்பது வெற்றியின் முதற்படி" என்பதை அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும். உலக வரலாறுகளில் தமக்கென தனி அத்தியாயங்களை வகுத்துக்கொண்டவர்கள் அத்தனைபேரும் தோல்வியிலிருந்து தான் வெற்றிக்கு நகர்ந்தவர்கள். தோமஸ் அல்வா எடிசன், மண்டேலா, பீத்தோவன், ஹென்றிபோட், கால்மார்க்ஸ், அப்துல் கலாம், அன்னை திரேசா போன்ற பலர் தோல்விகளுக்கூடாகவே வெற்றிப்படியேறி புகழ் ஏணியின் உச்சியைத் தொட்டு வரலாற்றில் சரித்திரமானார்கள்.

பரீட்சைகளில் சித்தியடைந்த பிள்ளைகளைப் பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்துவோம் சித்தியடையாத பிள்ளைகளுக்கு நம்பிக்கையூட்டி அவர் தம் மனதைத் திடப்படுத்தி, அவர்கள் மேலும் முன்னேற வழிவகுப்போம். உலகில் பிறந்த அனைத்து மனிதர்களும் உயர்ந்த நிலையை எட்டமுடியும் என்பதல்ல, மாறாக தோல்விகளாகிய வாழ்க்கையின் விழுதல்களை சரியான உணர்வுடன் ஏற்றுக்கொண்டு கடினமாக உழைத்தால் ஒவ்வொருவரும் வெற்றிபெற முடியும் என்பது மாற்றமுடியாத உண்மை. தனிநபர்களின் சக்திக்கும் திறமைக்கும் ஏற்ப வெற்றியின் அளவு மாறுபடலாம். ஆனால் வெற்றி நிச்சயம் சாத்தியமாகும். அது சத்தியமுமாகும். கீழே விழுவது மீண்டும் எழுவதற்கே. *"பத்தாவது தடவை நிலத்தில் விழுந்தவனை பூமி முத்தமிட்டுச் சொன்னது - நீ ஒன்பது தடவைகள் எழுந்தாய் அல்லவா"*

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# இளையோரிடம் உருவாகும் ஆர்வமும் உணர்வுகளும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வுலகையும் நிரப்புவதை நம்மால் இங்கு உணர முடிகிறது என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளையோரை வரவேற்று உரையாற்றியதுடன் இளையோரிடம் காணப்படும் ஆர்வ உணர்வு இந்த மாமன்றத்தின் நாட்கள் அனைத்திலும் தொடரவேண்டும் என்றும் தன் விருப்பத்தை வெளியிட்டார்.

**ஆயர்கள் மாமன்றத்தின் முக்கிய பணி - பகிர்வு**

உலக ஆயர்கள் மாமன்றம் பகிர்வுக்காக அமைக்கப்பட்ட ஓர் ஏற்பாடு என்பதை தன் உரையில் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை கூடியிருந்த அனைவரையும் சுதந்திரம், உண்மை, பிறரன்பு ஆகிய பண்புகளுடன் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள அழைப்பு விடுத்தார்.

அதேவேளை மற்றவர்கள் கூறுவதற்கு செவிமடுக்கவேண்டும் என்பதைக் கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பாக அடுத்தவர் சொல்லும் கருத்தில் நமக்கு உடன்பாடு இல்லாத வேளையில் கூடுதலான கவனத்துடன் அவருக்குச் செவிமடுக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை வலியுறுத்தினார்.

**தெளிந்து தேர்தலுக்கு அமைதி தேவை**

"தெளிந்து தேர்தல்" என்ற சொல் இந்த மாமன்றத்தின் மையமாக உள்ளது என்பதை சிறப்பாகக் குறிப்பிட்ட திருத்தந்தை அவர்கள் தெளிந்து தேர்தல் என்ற வழிமுறையில் அமைதி அவசியம் என்பதால் ஒவ்வோர் அமர்விலும் ஐந்து பேர் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட பின்னர் ஏறத்தாழ மூன்று நிமிடம் அமைதி காத்து செபிப்போம் என்று கேட்டுக்கொண்டார்.

**முதியோர் இளையோரின் முற்சார்பு எண்ணங்கள்**

வயதில் முதிர்ந்தோர், இளையோரை அனுபவம் அற்றவர்கள் என்றும் இளையோர வயதில் முதிர்ந்தோரை பழங்காலத்தவர் என்றும் கருதுவதால் இந்தச் சந்திப்பில் இத்தகைய முற்சார்பு எண்ணங்களைக் களைந்துவிட்டு நம் உரையாடலும் செவிமடுத்தலும் நிகழவேண்டும் என்று திருத்தந்தை தன் உரையில் விண்ணப்பித்தார்.

எந்த ஒரு சமுதாயத்தையும் முன்னெடுத்துச் செல்ல இளையோரும் தேவை, முதியோரும் தேவை என்பதை சிறப்பாகக் குறிப்பிட்டத் திருத்தந்தை இவ்விரு தலைமுறைகளும் இணைந்து செல்வதால் உருவாகும் நன்மைகளை சில எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிட்டார்.

**குருத்துவமயம் என்ற குறுகிய எண்ணத்தின் விளைவுகள்**

கத்தோலிக்கத் திருஅவையில் குருத்துவமயம் (Clericalism) என்ற பிரச்சினை பல நேரங்களில் பெரும் தடையாக அமைந்துள்ளது என்பதை சுட்டிக் காட்டிப் பேசியத் திருத்தந்தை அழைப்பு என்பதை குருத்துவம், துறவறம் என்ற குறுகிய கண்ணோட்டத்துடன் காண்பதைவிட்டு வெளியேறி பரந்துபட்ட கண்ணோட்டத்துடன் அழைப்பைக் குறித்து பேச நாம் இங்கு கூடியிருக்கிறோம் என்று கூறினார்.

**மாமன்றங்கள், ஏடுகளை உருவாக்குவதற்கு அல்ல...**

ஏடுகளை உருவாக்க வேண்டும் என்பதற்காக ஆயர் மாமன்றங்கள் நடைபெறுவதில்லை. ஏனெனில் இந்த ஏடுகளை முழுமையாக வாசிப்பவர்கள் குறைவு. அதேவேளையில் அந்த ஏடுகளில் உள்ள கருத்துக்களைக் குறித்து விமர்சனங்கள் செய்வோர் அதிகம் என்று கூறியத் திருத்தந்தை அவர்கள் திறந்த உள்ளத்துடன் பகிர்வதில் மாமன்றத் தந்தையர் கூடுதல் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

**'அழிவின் இறைவாக்கினர்களாக' இராமல்...**

திருஅவையில் நிலவும் குறைகளை பெரிதுபடுத்தி 'அழிவை அறிக்கையிடும் இறைவாக்கினர்களாக' இராமல், எதிர்காலத்தை நம்பிக்கையோடு நோக்கும் பணியாளர்களாக இருப்போம் என்றும் குறிப்பாக இந்த மாமன்றத்தில் திருஅவையின் எதிர்காலமான இளையோரைக் குறித்து நம் எண்ணங்களை இன்னும் வலிமையுள்ளதாக மாற்றுவோம் என்றும் திருத்தந்தை தன் உரையின் இறுதியில் அழைப்பு விடுத்தார்.

**இளையோரின் விடைகள் அச்சமற்றதாக வெளிப்பட வேண்டும்**

'இளையோராகிய நீங்கள் விற்பனைக்கல்ல, ஒருங்கிணைந்திருங்கள். கைப்பேசிகளுக்கு அடிமை யாகாதீர்கள்' என்ற வார்த்தைகளை இளையோருக்கு வழங்கிய திருத்தந்தை வத்திக்கானில் இடம்பெறும் இளையோர் குறித்த உலக ஆயர் மாமன்றத்துடன் தொடர்புகொண்ட ஒரு முக்கிய நிகழ்வாக சனிக்கிழமை மாலை ஏறத்தாழ 7000 இளையோரை அருளாளர் ஆறாம் பவுல் அரங்கில் சந்தித்து உரையாடி இளையோரின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், கேள்விகளுக்கான விடைகள் நம் அனைவரிடமிருந்தும் வரவேண்டும். அதுவும் அச்சமின்றி வருவதாக இருக்கவேண்டும் என்றார். சாட்சியங்கள், நடனங்கள், இசை நிகழ்ச்சிகள் என பல்வேறு திறமைகளின் வெளிப்பாடுகளாக இடம்பெற்ற இச்சந்திப்பில் உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளையோருக்கு சில வழிமுறைகளையும் பரிந்துரைத்தார்.

நன்மையை நோக்கிய நம் தேடுதலில் நம்மையே நாம் கண்டறிதல் நம் முதல்படியாக இருக்கவேண்டும் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நாம் ஓரிடத்தில் சுகமாக அமர்ந்துவிடாமல் முன்னோக்கி நடைபோட்டுக் கொண்டே இருக்கவேண்டும், அதுவும் வாழ்வோடு இணைந்து செல்வதாக இருத்தல் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

உலகின் பல நிலைகளிலும், சரிநிகரற்ற தன்மைகள் நிலவுவதையும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அதிகாரம் என்பது சேவை புரிவதற்கே, மற்றவர்களை அடிமையாக்குவதற்கல்ல என்பதையும் எடுத்துரைத்தார்.

**இமயமாகும் இளமை - நம்பிக்கைகளோடும், கனவுகளோடும், வாழுங்கள்**

"உங்களுடைய அச்சங்களோடு அல்ல மாறாக, உங்கள் நம்பிக்கைகளோடும், கனவுகளோடும் கலந்துபேசுங்கள்." - என பாப்பரசர் 23ம் ஜோண் போல் அவர்கள் இளையோருக்கு அன்று கூறிய அறிவுரையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நினைவுறுத்தினார்.

60 ஆண்டுகளுக்கு முன் 1958ம் ஆண்டு அக்டோபர் மாதம், 28ம் திகதி, திருஅவையின் தலைமைப் பொறுப்பை புனிதத் திருத்தந்தை 23ம் ஜோண் போல் அவர்கள் ஏற்றார். 60 ஆண்டுகளுக்குப் பின் அதே அக்டோபர் 28ம் திகதி 15வது உலக ஆயர்கள் மாமன்றம் வத்திக்கானில் நிறைவடையும். திருத்தந்தை 23ம் ஜோண் போல் அவர்கள் தொடக்கி வைத்த 2ம் வத்திக்கான் பொதுச்சங்கம், கத்தோலிக்கத் திருஅவையில் வசந்தத்தைக் கொணர்ந்தது என்று சொன்னால் அது மிகையல்ல. அதேபோல் இளையோரை மையப்படுத்தி, இளையோரின் ஆர்வமான பங்கேற்போடு நடைபெற்றுவரும் இந்த மாமன்றத்தின் பயனாக மற்றுமோர் வசந்தம் திருஅவையில் உருவாகும் என்று நம்புகிறோம். மாமன்றத்தில் பங்கேற்கும் இளையோர் தங்கள் கருத்துக்களை அச்சமின்றி வெளிப்படுத்தவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விண்ணப்பித்துள்ளார்.

அத்துடன் தன் பல்வேறு உரைகளில் கூறிவந்துள்ள ஒரு கருத்தை இந்த மாமன்றத்தின் தொடக்க உரையில் மீண்டும் ஒருமுறை நினைவுறுத்திய திருத்தந்தை, வயதில் முதிர்ந்தோர் தங்கள் அனுபவத்தால் பெற்றுள்ள ஞானத்தை இளையோருக்கு வழங்கவேண்டும் என்றும், இளையோர் தங்கள் கனவுகளை வயதில் முதிர்ந்தோருடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை "உங்கள் தோல்விகளைப்பற்றி சிந்திக்காதீர்கள் மாறாக இன்னும் நீங்கள் நிறைவேற்றாத திறமையைப் பற்றி எண்ணிப்பாருங்கள், நீங்கள் முயன்று தோற்றுப்போனதை பற்றி கவலை கொள்ளாதீர்கள். மாறாக, நீங்கள் இன்னும் சாதிக்கக்கூடியதைப்பற்றி அக்கறை கொள்ளுங்கள்" என்றும் இளையோருக்கு அழைப்பு விடுத்தார்."

## பரந்தன் பங்கில் சிறுவர் தினம்



பரந்தன் பங்கு சிறுவர் தின நிகழ்வு பரந்தன் புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி றெனோல்ட் ஜோர்ஜ் அடிகளாரின் தலைமையில் 06.10.2018 சனிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

பரந்தன் விளாஓடை கட்டளை அதிகாரி லெப்ரினன்ட் கேணல் பண்டார அவர்களின் அனுசரணையுடன் பரந்தன் அந்தோனியார் இளையோர் கழகத்தின் ஆதரவுடனும் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றதுடன், சிறுவர்களுக்கு விசேட பரிசில்களும் மற்றும் மதிய உணவும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# சமூகத்தின் உயிர்நாடி ஆசிரியர்

அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)

ஒரு சமூகம் உயிர்ப்புடன் திகழ்வதற்கு ஆசிரியர்கள் உயிர்நாடியாக விளங்குகிறார்கள். ஆசிரியர்கள் முக்கியத்துவத்தையும், மேன்மையினையும் நாம் உணர்ந்து கொள்வதன் மூலம் கல்விமான்களையும், ஒழுக்க சீலர்களையும் தன்னகத்தே கொண்ட எதிர்கால சந்ததியினரையும் உருவாக்கிட வித்திடமுடியும்.

அறிவின் ஊற்றுகளாக ஆசிரியர் திகழ்கின்றனர். மனித வர்க்கத்தின் மேன்மைக்காக ஒரு தொழிலாகவும், சேவையாகவும் ஆசிரியர் பணி விளங்குகிறது. சமூகத்தின் மாற்றத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவும், வாழ்வுக்காகவும் அடிப்படையில் சேவை செய்யும் தொழிலாக ஆசிரிய தொழில் காணப்படுவது ஆசிரியத்தின் தனித்துவமான வாண்மைத்துவமாகும். ஒரு ஆசிரியர் வசதியளிப்பவர், ஒழுக்கத்தைப் பேணுபவர், கணீப்பீடு மதிப்பீடு செயற்பாடுகளைச் செய்பவர், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பவர், நண்பர், நடுநிலையாளர், கல்வியை பெறுவதற்கான வழிகாட்டி, கற்பிப்பவர், கற்றல் கற்பித்தல்களை திட்டமிடுபவர், மாணவர் சிந்தனைகளை தட்டி எழுப்புபவர், மாற்றத்தை ஏற்படுத்துபவர், பொறுப்பு கூறுபவர், சமூக நடத்தையை வெளிக்காட்டுபவர், நிபுணத்துவம் உடையவர் என பல்வேறு வகிபாகங்களை கொண்ட சிற்பியாக விளங்குகின்றார்.

ஆசிரியருக்கு எமது சமூகத்தில் வெகுமதிப்புண்டு. ஆசிரியர்கள் மாணவர்களாலும் மரியாதைக்குட்படுத்தப்பட்டு தலைமுறை தலைமுறையாக தலைசாய்த்து வணக்கம் செலுத்தப்படுகின்றவர்கள். ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவோர் அதன் புனிதத்தை புரிந்து கொள்ள வேண்டும். வெற்றிகரமான கற்பித்தலுக்கு தெளிந்த மனமும், உன்னதமான ஆளுமையும், உள்ளார்ந்த அர்ப்பணிப்பும் அவசியமாகும்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்கிறார் மகாகவி பாரதி.

கல்வி பிறப்புரிமைகளுள் ஒன்றாக முக்கியத்துவம் பெறுகின்றது. ஒவ்வொரு பிள்ளையையும் பள்ளிக்கு அனுப்புவது பெற்றோரினது பொறுப்பாகவும், பதினாறு வயது-வரை கல்வி வழங்குவது அரசின் பொறுப்பாகவும் இன்று விளங்குகின்றது. ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆசிரியப்பணி ஏனைய எல்லாத் தொழில் துறைகளிலும் சிறப்பு பெறுகின்றது. ஆசிரியத் தொழில் இறைவன் அமைத்து வைத்த மேடையாகும். ஒவ்வொரு ஆசிரியருக்கும் இம்மேடை நாள்தோறும் கிடைக்கின்றது. ஆசிரியர் முன் மாணவர்கள் பார்வையாளர்கள் ஆகின்றனர். வைத்தியசாலை வர்த்தக நிலையங்கள், திணைக்களங்கள், வங்கி போன்றவற்றில் கடமை நேரம் முடிந்ததும் பணிகொள்வோர் கலைந்து விடுவார்கள். இங்கு நிரந்தரமற்ற உறவு முறையினர் பணி கொள்வோராக விளங்குவதுடன் இவர்கள் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ச்சியடைந்தவராக இருப்பதனால் சுலபமாக பணி செய்ய முடியும்.

ஆனால் ஆசிரியத் தொழிலில் மலரின் மென்மையிலும், மென்மையான குழந்தை உள்ளத்தை புரிந்து கொண்டு அதற்குள் பொதிந்துள்ள திறனை இனங்கான ஆசிரியர் தன் கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்தி வெளிக்கொணர்வார். பின் இத்திறன்களை வளர்க்கவும், புதுமையாக்கவும் தன் அறிவையும், கற்பித்தல் நுட்பத்தையும் உளவியலையும் பயன்படுத்தும் அற்புதமான தொழிலே ஆசிரியமாகும்.

மூன்று வயதுப் பாலர்களிலிருந்து பாடசாலைக் கல்வி, பல்கலைக் கல்வி வரை கற்றுக்கொண்டு இருக்கின்ற அனைவரும் ஆசிரியருடன் நெருங்கிய உறவைப் பேணுவர். பாடசாலையில் கற்கும் மாணவர்கள் மலர்ந்து கொண்டிருப்பவர்கள். உடல் இயக்கம் கூடியவர்கள், புதுமை காண விரைபவர்கள், மகிழ்ச்சியை விரும்புவர்கள், தாம் காண்பவை, கேட்பவை அனைத்தும் உண்மை என நினைப்பவர்கள். நீதியை விரும்புவர்கள், அநீதிக்கு நியாயம் கேட்பவர்கள், அன்பு காட்டுபவர்களை ஏற்றுக் கொள்ளபவர்கள், மாற்றத்தை விரும்புபவர்கள், ஆசிரியர் கற்பிக்கும் முறையில் கவரப்படுபவர்கள். ஆசிரியர் சொல்பவையெல்லாம் உண்மை என நம்புபவர்கள். இதனால் ஆசிரியரின் நடையுடை பாவனைகளை தம் பாணியாக மாற்றிக்கொள்பவர்கள். ஆசிரியரே தமது சிறந்த வழிகாட்டி எனக் கண்டு கொள்பவர்கள். ஆசிரியருக்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டால் சகிக்க முடியாதவர்கள். தம்மால் இயன்ற அனைத்தையும் ஆசிரியருக்காக விட்டுக் கொடுக்கக் கூடியவர்கள். ஆசிரியரை தெய்வமாக மதிப்பவர்கள்.



இத்தகைய இளம் தலை முறையினர் தொடரும் நிரந்தரமான உறவினைக் கொண்டிருப்பர். இவர்கள் உயர் தொழிலிலும், உயர்பதவியிலும் இருப்பினும் தனக்கு கற்பித்த ஆசிரியர்களை கண்டவுடன் எழுந்து நின்று மரியாதை செலுத்தும் நிலை இன்றும் எமது சமுதாயத்தில் உண்டு. இது ஆசிரியரின் சிறந்த கடமையின் பெறுபேறாகவும், ஆசிரியருக்கு கொடுக்கும் தெய்வீக மரியாதையாகவும் மதிக்கப்படுகின்றது.

ஆசிரியர் தான் தேடி தன் மூளையில் சேமித்து வைத்த அறிவினை வெறுமையாக உள்ள மாணவர்களுக்கு அள்ளி அள்ளி வழங்குகின்றார். அறிவுத்தாகம் போகப்போக தொடர்ந்து முடிவில்லாமல் மலர்ந்து கொண்டிருக்கும். அந்த மலர்கையில் மகிழ்வடைவது ஆசிரியரேயாகும். இங்கே கொடுப்பவனும் பெறுபவனும் மகிழ்வடைகின்றான். அள்ளி கொடுக்கக் கொடுக்க குறையாத செல்வம் கல்வி. கொடுக்க கொடுக்க ஆசிரியரின் அறிவும் பெருகிக் கொண்டே இருக்கும்.

மாணவர்களின் அழகினையும், வளர்ச்சியினையும், செயற்பாடுகளையும், அறிவுத் தேடல்களையும், குறும்புகளையும் இரசித்தபடி தொழில்புரியும் ஆசிரியத்தில் கிடைக்கும் இன்பம் எல்லோருக்கும் கிடைக்காது. ஆசிரியத் தொழிலின் வளங்களான மாணவர்கள் இளமை கொண்டவர்கள். குரு பக்தியினால் ஆசிரியர் பால் ஈர்க்கப்படுவார்கள். தானாய் ஈர்க்கப்பட்டு உற்ற உறவு நிலையில் சேரும் இளம் குருத்துக்கள் ஆசிரியர்களின் கிடைத்தற்கரிய மாபெரும் சொத்துக்களாகும்.

ஆசிரியர் தான் கற்பிக்கும் விடயத்தில் அறிவை நிரப்பிக் கொண்டு, அவற்றை கற்பிக்கும் விடயத்தில் அறிவை மாற்றமடையும் விடயத்திற்கேற்பவும் புதுமைகளுக்கேற்பவும் கற்பிப்பதை தேர்ந்தெடுத்து கல்வி உளவியலுடன் இணைந்து கற்பிக்க வேண்டும். வகுப்பறைக்குள் மகிழ்ச்சியுடன் உள் நுழைந்து எல்லா மாணவரினது முகங்களிலும் தன் கண்ணைப் பதித்து வணக்கம் கூறி, இனிய குரலில் அன்பான வார்த்தைகளில் பாட அறிமுகம் செய்து பொருத்தமான கண், உடல் மொழி அசைவுகள் மூலம் கற்றலை இலகுவாக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் இறைவன் அமைத்த மேடையில் தனி நடனமாடும் கதா பாத்திரமே என்றால் மிகையாகாது.

இறைவன் ஞான அருளைப் பொழிபவன். அதே தொழிலையே ஆசிரியரும் செய்கின்றனர் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் சிந்தித்துக் கற்பித்தலை மேற்கொள்ளும் போது உலகமே இன்பத்தில் மூழ்கும்.

விருப்பு வெறுப்புக்கள், உணர்வுகள் ஆசாபாசங்கள், உடல் உள எழுச்சி வேறுபாடுகள், இள வயது உடல் பலம், உளப்பலம் கொண்ட பல மாணவர்களின் முன் ஒரேநேரத்தில் எல்லோர் மனங்களுக்குமேற்ப கற்பிக்கும் ஆசிரியர்களின் தலைமைத்துவ வலிமையும் ஆளுமையும் அவர்களுக்கே தனித்துவமாகும்.

இதனடிப்படையில் ஆசிரியம் சோர்வடையாதது, தேடலுக்குரியது, உறங்காதது, கூட்டுறவானது, தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருப்பது. உறவுகளுடன் பின்னிப் பிணைந்தது, ஆராய்ச்சிக்குரியது, துன்பமற்றது, நிம்மதியானது, மகிழ்ச்சியானது, மதிப்புக்குரியது, தர்மமானது, இளமையானது, முடிவில்லாதது.

எனவே ஒவ்வொரு ஆசிரியரும் தம் ஆசிரியப்பணி இறைவனால் கொடுக்கப்பட்டது என்னும் மனநிலையுடன் தம் பணியை சிறப்புறச் செய்து ஒவ்வொரு வீட்டையும், நாட்டையும், உலகையும் ஒளிக்கு அழைத்துச் செல்வோம்.

# உள்ளத்தில் இருக்கிறது எல்லாமே.

முனிவரிடம் போய் நின்றான் இளைஞன்.
அவனுக்கு கதை ஒன்றைச் சொன்னார் முனிவர்.

பூனை ஒன்றை வளர்த்தான் ஒருவன்.
அது அவனோடு பண்போடு பழகியது.
இவனும் அப்பூனையோடு
பாசமாகப் பழகினான்.

**ஒருநாள்**
அந்தப் பூனை
வீட்டில் அட்டூழியம் செய்து வந்த பெருச்சாளி ஒன்றை கௌவியபடி வந்தது.
பார்த்தான், பார்த்தவுடன்
மெச்சினான்
மன மகிழ்ச்சி கொண்டான்.

**இன்னொரு நாள்**
இன்னொன்றைக் கௌவி வந்தது
அது ...
அவன் ஆசையாய் வளர்த்த செல்லக்கிளி
பார்த்தான் பார்த்தவுடன்
வெறுப்பானான்
மனத்துக்கம் கொண்டான்.

ஒரு கேள்வியை எழுப்பினான்
*அதேபூனையால்*
*ஏன் துக்கமும் மகிழ்ச்சியும் வருகிறது?*

**அதற்கடுத்தநாள்**
காட்டுக்குள்ளே போன அதேபூனை
ஒரு காட்டுக்குருவியை கௌவிக்கொண்டு வந்தது.
இப்போதும் பார்த்தான் பார்த்தவுடன்
மனமகிழ்ச்சியும் கொள்ளவில்லை
மனத்துக்கமும் அடையவில்லை

இன்னொரு கேள்வியை எழுப்பினான்
*அதேபூனையால்*
*ஏன் இப்போது இன்பமுமில்லை?*
*துன்பமுமில்லை?*

கதையை முடித்துவிட்டு முனிவர் கேட்டார்
தனக்குத் தொந்தரவு தந்த எலியை
கௌவி வந்ததைப் பார்த்தபோது
மகிழ்வுற்ற அதே மனம்
தனது செல்லக்கிளியை கௌவி வந்த போது
ஏன் மகிழவில்லை?
காட்டுக்குருவியை பூனை கௌவி வந்த போது
அதே மனம்
ஏன் மகிழவுமில்லை?
துக்கப்படவுமில்லை?
சொன்னார்
இன்ப உணர்வும் துன்ப உணர்வும்
உள்ளுக்குள் இருந்தே வருகின்றன.
வெளியில் இருந்து அல்ல

**உனது உள்ளத்தில் இருக்கிறது எல்லாமே. அந்த உள்ளத்திற்கு உள்ளே இயேசுவையே உள்ளுறையச் செய்து விட்டால் எல்லாமே இன்ப மயமே அல்லவா?**



# உங்களுக்கு "நன்றி"

கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டீஸ் "உன்னையே நீ அறிவாய்" என்றார். நம்மை உணரவே தடுமாறுகிறோம். இதில் பிறரை உணர்ந்து அவர்களை அனுசரிப்பது எப்படி? மிக எளிய வழியொன்று இருக்கிறது என்கிறார்கள் உளவியல் வல்லுநர்கள். அதுதான் "நன்றி" என்னும் சொல். பிறர் மனதை எளிதில் திறக்கும் சாவி "நன்றி" என்பது தான்.

எந்தச் சூழ்நிலையையும் மாற்றும் மந்திரச் சாவி இந்த நன்றி என்ற சொல். உங்கள் வாழ்வில் கிடைத்த நன்மைகளுக்காக நல்ல வாய்ப்புக்களுக்காக, நல்ல நினைவூட்டல்களுக்காக உங்களைச் சார்ந்தவர்கள் சாராதவர்கள் எல்லோரையும் இந்த நன்றி நம் மனதுக்கு நெருக்கமாக்கிவிடும்.

நன்றி உணர்வில் கிடைப்பது போன்ற ஆனந்தம் வேறு எதிலுமில்லை. மகாத்மா காந்தி தமிழ்மொழியை கற்றுக் கொள்ள விளைந்தபோது முதலாவதாக கற்ற தமிழ்ச் சொல் "நன்றி" என்பது தான். முதியோர் தினமும், ஆசிரியர் தினமும் அர்த்தப்பட அவர்களுக்கு "நன்றி"யை அர்ப்பணமாக்குவோம்.

# நம்பிக்கையில்லாதவர்களுக்கும் நம்பிக்கை இழந்தோருக்குமான பாதுகாவலர் புனிதர் யூதாததேயு



கலாபூஷணம் புலவர் அரியநாயகம்

புனிதர் யூதா ததேயு எழுதிய திருமுகத்தில் **“தூய்மைமிகு விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாழ்வைக்கட்டி எழுப்புங்கள். தூய ஆவியின் துணையுடன் வேண்டுதல் செய்யுங்கள், கடவுளது அன்பில் நிலைத்திருங்கள், என்றுமுள்ள நிலைவாழ்வை பெற நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் இரக்கத்தை எதிர்பார்த்திருங்கள்”** (யூதா 1:20-21) என்று போதிக்கின்றார்.

நம்பிக்கையில்லாதவர்களுக்கும் நம்பிக்கை இழந்தோருக்கும் இப்புனிதர் பாதுகாவலர். பேரிடருக்கு உள்ளாகி இவரிடம் மன்றாடுபவர்களுக்கு புனிதரின் உதவி உடனே கிடைத்துவிடுகிறது. இவர் அல்பேயுவின் மகன் சின்ன யாக்கோபின் சகோதரர். பார்ப்பதற்கு இயேசுவைப் போன்றே இருப்பார். இஸ்ரயேலில் தோன்றிய மிகச் சிறந்த மறைநூல் அறிஞர். அன்னை மரியா ஞானத்தின் இருப்பிடம். இயேசுவோடு புனிதர் ஒன்று சேர்ந்து அன்னை மரியாவிடம் வேதாகமங்களையும், செபங்களையும், ராபிகளின் 613 சட்டப்பரிவுகளையும் அவற்றின் விளக்கங்களையும் கற்றறிந்தவர். தம் தாயை விட அன்னை மரியாவை அதிகம் அன்பு செய்து அவரிடமே வளர்ந்து வந்தார் எனக்கூறுவர்.

அன்னை மரியாவிடமிருந்து யூதா ததேயு தூது வந்து பெத்தாய்தாவிலிருந்த இயேசுவை கானாவின் திருமணத்திற்கு அழைத்தாராம். இயேசுவின் சகோதரர்களில் (மத் 13:55) முதலில் இயேசுவை பின்பற்றிச் சீடரானார். பின்பு திருத்தூதராக திருப்பொழிவு செய்யப்பட்டார்.

பாஸ்கா திருவிருந்திற்குப்பின் தம் கட்டளைகளைப் பின்பற்றுவோர்களுக்கு தம்மை வெளிப்படுத்துவேன் என்று இயேசு வாக்களித்தார். யூதா இயேசுவிடம் “ஆண்டவரே, உம்மை உலகிற்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு வெளிப்படுத்தப்போவதாக சொல்கிறீரே ஏன்?” என்று கேட்டார். இயேசு மறுமொழியாக “என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பர், என் தந்தையும் அவர் மீது அன்பு கொள்வார், நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடி கொள்வோம்” (யோவா 14:23) என்றார்.

இயேசுவின் விண்ணேற்றத்தின் போது அங்கிருந்தார். முதல் பெந்தக்கோஸ்தே திருப்பொழிவில் விண்ணகக் கொடைகளைப் பெற்றார். இயேசுவின் நற்செய்தியை கலிலேயா, சமாரியா, மெசப்படோமியா, லிபியா எங்கும் சென்று மறைபோதித்தார். மெசப்படோமியாவுக்கு (தற்போதைய ஈராக் நாடு) திருத்தூதர் தோமா கிறிஸ்தவ மறையை கி.பி 35 இல் கொண்டு வந்தார். கி.பி 37 இல் யூதா மொசப்பதோமியா வந்து அங்கு தோமாவால் நிறுவப்பட்ட கிழக்கிய திருச்சபை பேதுருவால் பாபிலோன் சபை (1 பேது 5:13) என்றழைக்கப்பட்ட சபையை வழி நடத்தினார். தோமா கி.பி 52 இல் மொசப்பதோமியாவிலிருந்து வெளியேறும் போது யூதா இத்திருச்சபைக்கு தலைவரானார். கி.பி 60 இல் புனிதர் தம் திருமுகத்தை எழுதினார். எதேசா (துருக்கி நாட்டின் அர்பர் நகர்) வின் அரசர் அப்கர். இவர் தொழுநோயால் பீடிக்கப்பட்டார். இயேசுவின் புதுமைகளைக் கேள்விப்பட்டிருந்தார். வரலாற்றுத் தொடர்புடைய பழைய ஆவணங்களைப் பாதுகாக்கும் ஓவியக்கலைஞர் ஹன்னன் என்பவரை அரசர் இயேசுவிடம் தூதனுப்பினார். இயேசுவின் திருமுகத்தை நல்ல வண்ணங்களால் ஓவியம் வரைய முயன்ற இந்தக்கலைஞர் அத்திருமுகத்தின் மிக அதிக பிரசன்னத்தால் செயலிழந்து போனார். இயேசு தம் திருமுகத்தை ஒரு துணியில் பதித்து யூதாவிடம் கொடுத்தார்.

விண்ணேற்றத்திற்குப்பின் யூதா எதேசா வந்து இயேசு திருமுகம் பதித்த துணியை அரசரிடம் அளித்தார். அரசர் மிகுந்த வணக்கத்துடன் ஏற்றுக்கொண்டு பெரிய மாளிகையில் வைத்து மரியாதை செலுத்தினார். அரசருக்கு அற்புத சுகம் கிடைத்தது.

யூதா மெய்மறையை மிக்க திறமையுடன் போதித்ததால் அரசரும் மக்களும் ஏற்றுக்கொண்டு திருமுழுக்குப் பெற்றனர். கிறிஸ்தவ பாரம்பரியத்தின்படி புனிதர் யூதாததேயுவும், திருத்தூதர் பர்த்தலமேயுவும் அர்மேரியாவுக்கு மெய்மறையைக் கொண்டு வந்தனர். ஆகையால் தான் அர்மேனிய அப்போஸ்தலிக்கத் திருச்சபை இந்த இரு திருத்தூதர்களையும் தங்கள் பாதுகாவலர்களாகத் தெரிந்து கொண்டது. இந்த பாரம்பரியத்துடன் தொடர்பு கொண்டது தான் ததேயு துறவியர் இல்லம்.

யூதா மொசபதேமியாவில் நற்செய்தி போதித்தார். விசுவாசிகள் அதிகரித்தனர். எருசலேம் திருத்தூதர்கள் சங்கத்தில் கலந்துகொள்ள வந்த புனிதர் பின் திருத்தூதர் புனித சீமோனோடு லிபியா சென்று மறை போதித்தார். அடுத்து பெர்சியா சென்று நற்செய்தியின் ஒளி பரவிடச் செய்தார். கணக்கிட முடியாத அளவு மக்கள் திருமறையில் சேர்ந்தனர். அங்கு வாழ்ந்த மக்களின் காட்டுமிராண்டித்தனமான பழக்கவழக்கங்களால் ஏற்பட்ட மாறுதல்களால் குடும்ப வாழ்வு மதிக்கப் படவில்லை. இறந்தவர்களை வயல் வெளிகளில் எறிந்து கொடிய விலங்குகளுக்கும், பிணந்தின்னிப் பறவைகளுக்கும் இரையாக்கும் நாகரிகமற்ற செயல்கள், அட்டூழியங்கள் எங்கும் நிறைந்து காணப்பட்டன. புனிதர்களிடமிருந்து நற்செய்தியை ஏற்றுக்கொண்ட மக்கள் மனமாற்றம் அடைந்தனர். கொடுமைகள் மறைந்து போய் கிறிஸ்தவ இரக்கச் செயல்கள் பெருகின. அங்குள்ள மந்திரவாதிகளின் சூழ்ச்சிகளை முறியடித்தன. கெட்ட மந்திரவாதிகளை, படைத்தலைவனாக இருந்த இளவரசன் ‘படராச்’ என்பவன் புனிதர்களின் மீது அவதூறு பேசிய மந்திரவாதிகள், மக்கள் பலரை தீயிலிட்டு எரிக்க ஆணையிட்டான். மன்னிக்கும் மனப்பாங்குடைய புனிதர்கள் தலையிட்டு தண்டனையைக் கைவிடச் செய்தனர். தம் சகோதரர் புனித சீமோனை எருசலேமின் புனித ஆயராகத் திருநிலைப்படுத்த உதவினார். கி.பி 65 இல் பெர்சியாவில் திருத்தூதர் புனித சீமோனோடு மறைசாட்சியாக மரித்தார் என்று கூறப்படுகிறது. புனிதர் கரத்தில் கோடரியுடன் காட்சியளிக்கின்றார். கோடரியால் தாக்கப்பட்டு உயிர்நீத்தார் என்று கூறப்படுகிறது. திருவுடல் உரோமை கொண்டு வரப்பட்டு புனித பேதுரு பேராலயத்தில் கீழுள்ள புதையிடத்தில் வைக்கப்பட்டு இன்று வரை விசுவாசிகளினால் வணக்கம் செலுத்தப்படுகிறது.

# கருக்கொலையும், இயற்கை முறை குடும்ப நலத்திட்டமும்



அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)

“பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள்” என்று தம்பதியருக்கு இறைவன் ஆசீர் அளித்தார். இறைவனுக்கு மட்டுமே உரித்தான படைப்பாற்றலில் தம்பதியருக்கும் பங்களித்திருப்பது ஒரு மாபெரும் கொடையாகும். இறைவன் அருளும் எல்லாச் செல்வங்களிலும் மிகச் சிறப்பானது மக்கட் செல்வமே. தாயின் கருவில் உருவானதிலிருந்தே எல்லா மனிதர்களும் இறைவனுக்குச் சொந்தமானவர்கள்.

ஒவ்வொரு உயிரும் கடவுளின் கொடை. எனவே அந்த உயிரை கருவிலேயே அழிப்பது கொலைக் குற்றமாகும், பாவமாகும். கருவைக் கலைப்பதால் விளையும் நன்மையைவிடத் தீமையே அதிகம். குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்க வேண்டும் என விரும்புவோர் சுயக்கட்டுப்பாட்டுடன் வாழ்க்கையை நடத்துவது சிறப்பு. கரு தோன்றிய கணத்திலேயே உயிர் ஆரம்பிக்கிறது. எனவே கரு உருவாகும் காலத்திலிருந்தே நமது உயிர் கடவுளுக்குச் சொந்தம். அதனை அழிக்க முயற்சிப்பது கடவுளுக்கும் மனிதனுக்கும் எதிரான பாவம் என்ற விழிப்புணர்வு நமக்குத் தேவை.

கொலை செய்யாதிருப்பாயாக என்பது பத்துக்கட்டளைகளில் ஆறாவது கட்டளையாகும். இந்தக் கட்டளையை மிகத்தெளிவாக புரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். ஒரு தாய் தன்னுடைய குழந்தையை கருவறையிலேயே கொலை செய்வதை விட மிகப்பெரிய பயங்கரவாதம் இந்த உலகில் வேறெதுவும் கிடையாது. எனவே கருக்கலைப்பும் ஒரு கொலையே. இதை உணர்ந்து தவிர்த்து வாழ எம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இயற்கை முறைக் குடும்ப நலத்திட்டம் என்பது ஒரு கருத்தடை முறையல்ல. ஆனால் பெண்ணின் வளமான நாட்கள் எவை என்பதைக் கண்டறிவதற்கான வழியாகும். இந்த வளமான நாள்களில் உடல் உறவின்றி ஒதுங்கியிருப்பதால் கருவுருதல் நிகழ்வதில்லை.

இயற்கைமுறைக் குடும்பக் கட்டுப்பாடு மூலம் தம்பதிகள் வாழ்நாள் எல்லாம் சுகமாக மகிழ்ச்சியாக ஒற்றுமையுடன் அளவோடு பெற்று வளமாக வாழ முடியும் என்று குடும்ப நலத்திட்டத்தை தீட்டியுள்ளார் இறைவன். கத்தோலிக்க திருஅவை குடும்பக் கட்டுப்பாட்டை எதிர்ப்பதில்லை. இயற்கையான வழிமுறைகளை பயன்படுத்தத்தூண்டுகிறது. செயற்கை முறை இறைவனின் திட்டத்திற்கு எதிரானது. எனவே திருஅவை ஆதரவு கொடுப்பதில்லை.

இயற்கை முறைகளைப் பின்பற்றுவது திருச்சபையின் படிப்பினைக்குட்பட்டது என்பதை திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் தெளிவாக்குவதோடு இது போன்ற புதிய ஆராய்ச்சிகள் தொடர வேண்டுமென்றும் மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறார். இந்த இயற்கை முறைகளை மக்கள் மத்தியில் பரவலாக்க வேண்டியது திருஅவையின் கடமை என்றும் கூறுகிறார். பெண்ணின் உடல் அமைப்பிலேயே இயற்கையின் மகப்பேற்றை நெறிப்படுத்தும் ஒழுங்கமைவு உள்ளது. அதன்படி மாதத்தின் பெரும்பாலான நாட்களில் கருவுற இயலாத நிலையிலும் கருமுட்டை வெளிவரும் வேளையில் ஒரு சில நாள்கள் மட்டுமே கருவுறக்கூடிய நிலையிலும் ஒரு பெண் இருக்கிறாள். ஒரு பெண்ணிடமிருந்து மாதத்திற்கு ஒரு சினை முட்டை மட்டுமே வெளிவருகிறது. அந்த கரு முட்டையின் உயிர் வாழ்க்கை நேரம் ஒரே ஒரு நாள் மட்டுமே. அதாவது 24 மணி நேரம். முட்டை வெளியேறும் நேரத்தை அடையாளம் காணும் உத்தியைத் தம்பதியர் அறிந்திருந்தால் ஒரு கரு உருவாவதைத் தள்ளிப் போடவும் திருமணச் செயலில் ஈடுபடாமல் ஒதுங்கியிருக்கவும் முடியும். இதையே வளமான காலம் பற்றிய தெளிவு என்பர். கருச்சினை என்பது கருவூட்டுதலைத் தவிர்ப்பதற்கு மட்டுமல்ல கருவூட்டு தவற்கும் உதவுவதாகும்.

ஆண் பெண் பால் வேறுபாடுகள் மனிதருள் தற்செயலாக ஏற்பட்டவையல்ல. மாறாக அவை இறைஞானத்தால் திட்டமிடப்பட்டவை. தம்முடைய சாயலில் மனுக்குலத்தைப் படைத்த கடவுள் தமது படைப்பாற்றலிலும் மானிடருக்குப் பங்களிக்க விரும்பியதால் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்.

திருமண வாழ்வில் சில தம்பதியருக்கு குழந்தைப்பேறு இல்லாமல் போகலாம். குழந்தைகளில்லாததால் இந்த திருமணங்கள் செல்லாதவை ஆகிவிடாது. மக்கட்பேறு இருந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லாத் திருமணங்களும் முழுமையானவைதான்.

### இற்கைமுறைக் குடும்ப நலத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள்.

- இம்முறை இயற்கை தமிழ் பண்பாடு கலாசாரம் மற்றும் திருச்சபையின் படிப்பினைக்கு ஏற்றது.
- மனைவியின் உடல் நலனை மதித்து கணவன் ஏற்றுக்கொள்ளும் நிலைமை உருவாகிறது.
- மனைவியின் வளமான நாட்களை அறிந்து திருமண உறவு வைத்துக் கொள்ள முடிகிறது.
- தேவையான பொழுது திட்டமிட்டு குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- மகப்பேற்றினைத் தவிர்ப்பதற்கும் இந்த இயற்கை முறை உதவுகிறது.
- குடும்பம் அமைதி மற்றும் ஒற்றுமையில் நிலைக்கும்.
- பின் விளைவுகள் கிடையாது
- செலவுகள் இல்லை.
- அறுவை சிகிச்சை இல்லை.
- கருவிகள் தேவையில்லை.
- உடல் வலிமை அதிகரிக்கும்.

திருஅவையின் படிப்பினைகளைப் பின்பற்றி வாழுகின்ற பொழுது மனிதம் மதிக்கப்படுகின்றது. இறைவனின் திட்டம் காக்கப்படுகின்றது. இயற்கைமுறை குடும்பநலத் திட்டத்தை திருஅவை அங்கீகரிக்கின்றது. எனவே இந்தப் படிப்பினையை மனதில் ஏற்று எல்லா செயற்கை முறை கருத்தடை முறைகள் அனைத்தையும் தவிர்த்து இறைவனின் திட்டத்தை மதித்து மனித மாண்பை காத்திடுவோம்.

திருஅவை அனைத்து செயற்கை முறை, கருத்தடை முறைகளை எதிர்த்து வன்மையாகக் கண்டிக்கின்றது. அற்ப சொற்ப பொருளாதார நன்மைகளுக்காக உடல் சுகத்திற்காக அடிமைப்பட்டு வாழாமல் நல்லொழுக்கத்தில் வாழ்ந்து எமது குடும்பத்தில் இறையாட்சி மலர்ந்திட இறைவனின் திட்டத்திற்குள் எம்மை உட்படுத்தி பிரமாணிக்கத்தோடு வாழ்வோம்.

காவலன் கலசம்

# தேசிய பொதுநிலையினர் தினம் - 14.10.2018

## தேசிய பொதுநிலையினர் கழக இயக்குநரின் ஆசிச்செய்தி – அருட்பணி. ரோய் கிளரன்ஸ்



தேசிய பொதுநிலையினர் ஞாயிறு. " உலகில் இறை தூய்மையின் கண்ணாடியாக வாழ இறைவன் உங்களை அழைக்கின்றார்" எனும் கருப்பொருளின் கீழ் இன்று கொண்டாடப்படுகின்றது. நற்செய்திக்கு சான்று பகர்ந்து இறைவன் மீது உள்ள பிரமாணிக்கத்தை உறுதிப்படுத்த எண்ணற்ற வாய்ப்புக்கள் உள்ளதால், இறைப்பணியாற்றுவதில் பொதுநிலையினரின் அழைப்பானது முக்கியத்துவம் பெறுகின்றது. திருச்சபையின் வாழ்வில் பொது நிலையினரின் திருத்தூது பணியானது ஓர் இறைசித்தமாக கருதப்படுகின்றது. சமுதாயத்தில் மக்கள் மத்தியிலிருந்து விலகி வாழ்வதே புனிதமான வாழ்வுக்கான இலகுவான சிறந்த வழி என்று சில வேளைகளில் பொதுநிலையினர் சிந்திக்கக் கூடும். ஆனால் இன்றைய நாளின் கருப்பொருளானது உலகில் மக்கள் மத்தியில் இறை தூய்மையை இழந்துவிடாமல் புனித வாழ்வு வாழ இறைவன் நம்மை அழைக்கின்றார் என்பதை நினைவூட்டுகின்றது.

நாங்கள் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டிருக்கின்றமையால் அவரின் இறை தூய்மையின் சாயலிலும் பங்கேற்கின்றோம். கடவுள் தூயவராக இருக்கின்றார். எம்மையும் அத்தூய்மைக்கு அழைத்து நிற்கின்றார். "தூயோரய் இருங்கள் ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்!" (லேவியர் 19:02) என்ற இறைத்தந்தையின் அழைப்பினை அடிப்படையாகக் கொண்டு. "என் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" (மத்தேயு 05:48) என கிறிஸ்துவும் நம் ஒவ்வொருவரையும் அழைத்து நிற்கின்றார். ஆகவே கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் தங்களுடைய வாழ்வில் தூய்மையும், நிறைவும் பெற்று வாழ அழைக்கப்படுகின்றனர். எனவே இறைதூய்மையில் வாழவும், அதில் நிறைவு காணவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இன்றைய பொது நிலையினர் ஞாயிறானது உலகில் இறைதூய்மையின் கண்ணாடியாக வாழ நாம் பெற்றுக்கொண்ட அழைப்பினை நினைவூட்டுவதோடு, இவ் இறைதூய்மையானது நம் இதயங்களில் பற்றியெறியும் தீப்பொறியான இறைவார்த்தையே என்பதையும் எடுத்துரைக்கின்றது. இறைவனின் மாட்சிமை, தூய்மை என்பவற்றை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ளும்போது அவ் இறைவனின் புனிதத் தன்மையை மட்டுமல்லாமல் எமது பாவ நிலையை எம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

## யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநரின் ஆசிச்செய்தி – அருட்பணி. யோ.யோ.மவுலிஸ்



அனைவருக்கும் வணக்கம். இதுவரை காலமும் மறை மாவட்ட ரீதியாக கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று நினைவுகூரப்பட்ட பொதுநிலையினர் தினமானது இவ்வாண்டிலிருந்து ஒக்ரோபர் மாதத்தில் வருகின்ற தேசிய பொது நிலையினர் தினத்தோடு இணைந்து இலங்கை திருஅவையாக கொண்டாட இருகின்றோம்.

திருமுழுக்கு திருவருட்சாதனம் வழியாக ஒரு கிறிஸ்தவன் தூய வாழ்வுக்கான, பணிவாழ்வுக்கான, குழும வாழ்வுக்கான அழைப்பை பெற்றிருக்கின்றான். இவ்வருடம் பொதுநிலையினர் தினத்திற்குரிய கருப்பொருளாக "உலகில் இறை தூய்மையின் கண்ணாடியாக வாழ இறைவன் உங்களை அழைக்கின்றார்" என்ற சிந்தனை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. "நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை கிறிஸ்து வழியாக தேர்ந்தெடுத்தார். (எபே.1:4) நாம் பெற்றுக்கொண்ட தூய வாழ்வில் வளர இறைவார்த்தை வாசிப்பு, அருட்சாதனக் கொண்டாட்டங்கள், அன்பு, சாட்சியப் பணிகள் எமக்குப் பெரிதும் உதவியாக உள்ளன.

கத்தோலிக்க நம்பிக்கையாளர்களில் 99.9%மாக இருப்பவர்கள் பொது நிலையினரே. திருநிலையினர் (குருக்கள், துறவிகள் சொற்ப வீதத்தினரே) பொது நிலையினரே குடும்பம், பங்கு பணித்தளம், அரசியல் தளங்களில் நின்று செயற்படுகின்றவர்கள். பெற்றுக்கொண்ட தூய வாழ்வையும் அழைப்பையும் பகிர்ந்து கொள்வதும், தூய வாழ்வுக்கு எதிரான சக்திகளைக் கண்டுபிடித்து அவற்றுக்கு எதிராக செயற்படுவதும் காலத்தின் தேவையாகும். சமூகத்தின் தீய சக்திகள் இன்று எம் சமூகத்தில் முக்கியமாக இளையோர் மேல் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கின்றன. இளையோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வாழ்வின் சவால்களை எதிர்கொண்டு இறைதிட்டத்தை தேடுபவர்களாக உருவாக்க தளத்திருச்சபை எடுக்கும் முயற்சிகளுக்கு தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று கேட்டு இறையாசீர் வழங்கி நிறைவு செய்கின்றேன்.

## திக்கெட்டும் பொதுநிலையினர் பணி எட்டட்டும்

திருச்சபையை தூண்களாக தாங்கி நிற்கும் பொதுநிலையினர் நாள். இந்த நாளிலே பொதுநிலையினராகிய நாம் எமது வாழ்வை சீர்தூக்கிப் பார்த்து திருச்சபையுடன் இணைந்து வாழ்வாலும், பணியாலும் அயலானை அன்பு செய்து வாழ்வோமாக.

இன்றைய கலியுகத்திலே சொல்லொண்ணாத் துன்ப துயரங்கள், வாழ்வுச் சுமைகள், மன விரக்திகள், வாள்வீச்சுச் சம்பவங்கள், குடிபோதை, அடிதடி, தொடர்புசாதனங்களின் ஆக்கிரமிப்பு, மெகா சீரியல்களின் ஆக்கிரமிப்பு என வாழ்வு பரபரக்கின்றது. சமூக அநீதிகள் தலைவிரித்து தாண்டவமாடுகின்றது.

எம்மால் முடியும். வாழ்வை மாற்ற முடியும். நின்று, கவனித்து, முன்னேறுவோம்!! செய்வோம்... நல்லதை இன்றே! உலகப் பந்து உன் கால்களில். நம்பிக்கையுடன் எழு! திக்கெட்டும் பொது நிலையினர் பணி எட்டட்டும்...



திரு.மரியாம்பிள்ளை றோமியல்
தலைவர்
பொதுநிலையினர் கழகம்
யாழ். மறைமாவட்டம்

### கழகத்தின் கடந்தவருட செயற்பாடுகள்

- அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் பொதுநிலையினர் எழுச்சி அமர்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாண்டியன்தாழ்வு பங்கிற்கான பொது நிலையினர் விழிப்புக்குழு ஏற்படுத்தப்பட்டது.
- அரியாலை புனித யூதாததேயு ஆலயத்திற்கான "புனித யூதாததேயு பந்தி" என்னும் வின்சன் டி போல் சபை ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வின் ஞாபகார்த்தமாக மரம் நடுகை மேற்கொள்ளப்பட்டது.
- மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகங்களை தரிசித்து அவர்களை உற்சாகப்படுத்தியதோடு ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

### எதிர்காலத்தில்…

- மறைக்கோட்ட கழகங்களை ஒழுங்குமுறையில் தரிசித்தல்.
- இளையோரை ஊக்குவிக்கும் முகமாக பசாம் போட்டி நடத்துதல்.
- கத்தோலிக்க சட்டவாளர்களையும், கத்தோலிக்க மருத்துவர்களையும் உள்ளடக்கியதாக தனித்தனி அமைப்புக்களை உருவாக்குதல்.
- இரத்ததான முகாம் அமைத்தல்.
- கலாசார சீரழிவு தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வுகளை ஒழுங்குசெய்தல்.
- பங்குகளில் பொதுநிலையினர் அமைப்புக்களை உருவாக்குதல்.

## திருமறையில் பொதுநிலையினரின் பணி காத்திரமானது

இ.அ.அமலரட்ணம்

### முகவுரை

எமது கத்தோலிக்க திருமறையில் பொதுநிலையினரின் எண்ணிக்கை 99.9% வீதத்திற்கு மேலாக இருப்பதனால் அவர்களுடைய காத்திரமான பணிகள் தான் திருமறையின் வளர்ச்சிக்கும் அதன் உறுதித் தன்மைக்கும் பெரும் துணையாக இருக்கின்றது. திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் பொதுக்குருத்துவ அழைப்பின் ஊடாக இறைமகன் இயேசுவின் சீடத்துவத்தில் பங்கெடுக்கவும், தன்னுடைய வாழ்வாலும், வார்த்தையாலும் இறையரசை அறிவிக்கவும் கடமைப்பட்டுள்ளார்.

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப்பெறுவர். நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர்" (மாற்கு 16:15-16) என்ற திருத்தூதர்களுக்கான கட்டளை எமக்கும் தரப்படுகின்றது. எனவேதான் திருச்சபைக்குள் பொதுநிலையினரின் சீடத்துவப் பணிகளை ஊக்குவிக்கவும் அவர்களின் பணிப்பொறுப்புக்களை உணர்த்தவும் காலத்துக்குக் காலம் சமகாலத் தேவைக்கேற்ப திருமறை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. தேசிய பொதுநிலையினர் தினம் அனுஷ்டிக்கப்படுவதன் ஊடாக இச்செயற்பாடுகள் சாத்தியமாகின்றது.

### தேசிய பொதுநிலையினர் தினம்

இலங்கை கத்தோலிக்க திருச்சபை 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய பொதுநிலையினர் தினத்தை இம்மாதம் (ஐப்பசி) 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுசரிக்கின்றது. இலங்கையின் 12 மறை மாவட்டங்களிலும் உள்ள அனைத்துப் பங்குகளிலும் இத்தினம் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. இத்தினத்திற்கான சுவரொட்டிகளும் மற்றும் திருப்பலிக்கான முன்னுரை, விசுவாசிகள் மன்றாட்டுகள் போன்றவையோடு கருப்பொருளும் தேசிய கத்தோலிக்க பொதுநிலையினர் ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. "இவ்வுலகத்தில் ஒவ்வொரு இறைவனின் தூய்மைக்கு கண்ணாடிகளாக வாழ எம் ஒவ்வொருவரையும் இறைவன் அழைக்கின்றார்" எனும் கருப்பொருளைத் தந்து எம்மைச் சிந்திக்கவும் வாழவும் அழைத்து நிற்கின்றது.

"உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவ ராக இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" (மத். 5:48) என்ற இறைவார்த்தை வானகத் தந்தையின் நிறை பண்புகளையும் புனிதத் தன்மையையும் நிரூபிக்கின்றது. அத்துடன் "தூயோராய் இருங்கள் ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்" (லேவி. 19:2) என்ற இறைவார்த்தையும் இதை உறுதிப்படுத்துகின்றது. மேலும் "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத். 5:8) என்ற மலைப்பொழிவின் கூற்றும் எமது புனித வாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றது. எனவே எமது பொதுநிலை சீடத்துவ வாழ்வும் பணிகளும் வானகத் தந்தையின் புனிதத் தன்மைக்கு சான்றாக அமையக்கூடியதாக முன்னெடுக்கப்படவேண்டும்.

### யாழ் மறையில் பொதுநிலையினர் அமைப்புக்கள்

யாழ் மறைமாவட்டத்தில் பொதுநிலையினர் பணிகளை ஊக்குவிக்கவும், அவர்களை பங்கேற்கும் திருச்சபையாக மாற்றவும் கடந்த காலங்களில் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமை அனைவரும் நன்கறிந்ததே. பங்குகளில் பங்குமட்ட விழிப்புணர்வுக் குழுக்களை ஏற்படுத்தி இயங்க வைத்ததன் ஊடாக இவர்களின் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பங்குகளையும் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடியதாக மறைக்கோட்டப் பொதுநிலையினர் கழகம் ஏற்படுத்தப்பட்டு, ஆறு மறைக்கோட்டங்களிலும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மறை மாவட்ட பொதுநிலையினர் கழகம் மறைக்கோட்ட செயற்குழுவையும், மறை மாவட்ட பக்திச்சபை உறுப்பினர்களையும், நியமன உறுப்பினர்களையும் கொண்டு செயற்படுவதோடு, மறைக்கோட்டங்களைத் தரிசித்து ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன. பக்திச் சபைகளும் பொதுநிலை யினர் பங்கேற்கும் அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்து செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### பொதுநிலையினரின் இறையாட்சிப் பணி

2ம் வத்திக்கான் சங்கத்தின் பின் பொது நிலையினரின் பொற்காலம் என்று அழைக்கப் பட்டுள்ளது. பொதுநிலையினர் திருமுழுக்கின் ஊடாக பெற்றுக்கொண்ட இறையாட்சிப் பணியை தமது நிலைகளில் இருந்து புரிவதற்கு பல வாய்ப்புக்களும் உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. துணிவோடும் திருச்சபை சார்ந்த பதவிகளையும் பணிகளையும் ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் சீடத்துவத்துக்குள் நின்று

*(தொடர்ச்சி 11ம் பக்கம்)*

## காவலன் கலசம்

நம்பிக்கை – வினைச் சொல் என்றால்
விசுவாசம் – பெயர்ச்சொல்

மேலும், நம்பிக்கையை எதிர் காலம் எனக் கொண்டால் விசுவாசத்தை நிகழ்காலம் எனலாம். இறைவன் ஒன்றுமில்லாத் தன்மையிலிருந்து அனைத்தையும் படைத்தார். அதாவது விசுவாசத்தின் உச்சத்தினால் இவ்வுலகையும் அண்ட சராசரங்களையும் படைத்தார். அதே நம்பிக்கையையே தனது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் வாழ்வதற்கும் அடிப்படையாக வைத்திருக்கின்றனர்.

மனிதராகிய நாமும் நல்லதை நம்புகின்றோம் அல்லது கெட்டதை நம்புகின்றோம். சிலர் நல்லது நடக்கும் என்று நேர்மறையான எண்ணங்களைக் கொண்டிருப்பர். அதேவேளை பலர் பயத்தினால் நோய், துன்பம், நட்டம், துயரம், விபத்து போன்ற எதிர்மறையான எண்ணங்களையே கொண்டிருப்பர். இந்த இருமன நிலைகளும் ஒன்றில் நம்பிக்கையை அல்லது அவநம்பிக்கையை வளர்க்க உதவுகின்றன.

நம்பிக்கையே மனித வாழ்க்கையை மகிழ்ச்சியாகவோ அல்லது நரகமாகவோ ஆக்குகின்றது. நம்பிக்கை மரத்தின் வேர் மாதிரி. நிலத்தில் மறைந்திருக்கும் ஆனால் மரத்தையே அதுதான் தாங்குகின்றது. மரத்தின் வளர்ச்சிக்கும் உதவுகின்றது.

நம்பிக்கையே மனித வாழ்வின் அச்சாணி. நம்பினால் நடக்கும், நம்பாவிட்டால் நடக்காது. இறைவன் வகுத்த சட்ட மிது. இதற்கு இன மத பேதமில்லை.

மத்தேயு நற்செய்தியில் (17:20) இயேசுவின் சீடரால் பேய் பிடித்த ஒரு சிறுவனை குணமாக்க முடியாமல் போன போது. "அதை ஏன் எங்களால் ஓட்ட இயலவில்லை" என்று இயேசுவிடம் கேட்ட போது, "உங்கள் நம்பிக்கைக் குறைவு தான் காரணம். உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கை இருந்தால், நீங்கள் இம் மலையைப் பார்த்து இங்கிருந்து பெயர்ந்து போ எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். உங்களால் முடியாதது ஒன்றும் இராது என்று நான் உங்களுக்குச் சொல்கின்றேன்" என்று இயேசு கூறினார்.

இயேசு நற்செய்தியை அறிவித்த போது நம்பிக்கையை வளர்த்தார். தனது புதுமைகள் மூலம் "நம்பிக்கை என்னும் மன நிலையை" ஊக்குவித்தார். இயேசு சென்ற மரணச் சடங்குகளில் கூட செத்தவரை உயிர்ப்பித்து நம்பிக்கையை ஊக்குவித்தார்.

4 நற்செய்தி நூல்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் தனித்தன்மை பெறுகின்றன. மாற்கு நற்செய்தி விசுவாசத்திற்கான நற்செய்தி நூல் என நான் நம்புகின்றேன். மற்றைய நற்செய்தி நூல்களை விட நுணுக்கமாக சில காரியங்களை இந்நூல் எடுத்துரைக்கின்றது. உதாரணமாக (மாற்கு 16: 1-5) "தம் சொந்த ஊரில் வல்ல செயல் எதையும் செய்ய அவரால் இயலவில்லை. மக்களது நம்பிக்கையின்மையைக் கண்டு அவர் வியப்புற்றார்" என்று கூறப்பட்டுள்ளது. இயேசுவிற்கே இந்த நிலமை என்றால் அவவிசுவாசிகளுடன் நாம் இருக்கும் போது நமது நிலை என்னவாகும்?

மேலும் மாற்கு 5ம் அதிகாரத்தில் யாயீரின் மகள் இறந்துவிட்டாள். போதகரை தொந்தரவு செய்ய வேண்டாம்

# விசுவாசம் , நம்பிக்கை



என்று யாயிரின் வீட்டார்கள் வந்து யாயிரிடம் கூறிய போது, அந்த வார்த்தைகளைக் கேட்ட இயேசு யாயிரிடம் "அஞ்சாதீர் நம்பிக்கையை மட்டும் விடாதீர்" என்று கூறுவது நம்மையும் நோக்கி மரணம் முடிவல்ல, உயிர்ப்பும், உயிரும் நானே என்று கூறுவது போல உள்ளது.

உலக வாழ்க்கையை வாழ நம்பிக்கை எப்படி உதவுகின்றதோ, அதே நம்பிக்கையை தன்னை அறியவும் இறைவன் பயன்படுத்துகின்றார். நிஜ **வாழ்வில் நம்பிக்கைக்கு எதிர்ப்பதம் அவநம்பிக்கை அல்ல பயமேயாகும்.**

எங்கள் பயத்தால் சந்தேகங்கள் வருகின்றன. சந்தேகங்கள் துரோகிகள் மாதிரி எங்களால் வெற்றிபெறக் கூடிய வற்றையே அடைய முடியாமல் செய்து விடுகின்றது. பயம் எங்களை வலுவற்ற வர்களாக்கி விடுகின்றது. என்பது தான் யதார்த்தம்.

1 யோவான் 4:18 அன்பில் அச்சத்

**சகோதரன் சேவியர் ஜோசப்**

திற்கு இடமில்லை. மாறாக நிறை அன்பு அச்சத்தை அகற்றிவிடும். ஏனெனில் அச்சத்தில் தண்டனை உணர்வு அடங்கியுள்ளது. அச்சம் கொண்டுள்ளவரிடம் அன்பு முழு நிறைவு அடையாது.

இயேசுவை நம்பாவிட்டால் பாவம் என்று வேதத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. (யோவான் 16:9). ஆகவே இயேசுவை நம்புவோம், அன்பு செய்வோம். அவர் கட்டளைப்படி நல்ல சமாரியனைப் போல் செயற்படுவோம்.

**விசுவாசம் எதனால் எப்படி வரும்?**

உரோமர் 10:7 "நற்செய்தி அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும்". கிறிஸதுவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு. இன்று அன்றைய நாள்கள் போலில்லை. இன்று வேதாகமம் தடையின்றிக் கிடைக்கின்றது. சகல ஊடகங்கள் ஊடாகவும் நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. ஆனாலும் அனேகமானோர் அதை நாடுவதில்லை. ஆனாலும் உண்மையை மனத்தால் விரும்புகின்றவர்கள். அதைச் சார்ந்து நிற்பவர்கள் இயேசு கூறியபடி (யோவான் 18:37) "உண்மையைச் சார்ந்த அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்" என்றபடி இயேசுவை நோக்கி வருவர். இயேசுவை எதிர்த்த பவுல் அப்போஸ்தலன் இதற்கு ஒரு நல்லுதாரணமாகும். பவுல் தான் நம்பியதை விசுவசித்தவர். ஆனால் உண்மையை அறிந்த போது இயேசுவிற்காக தம் உயிரையும் கொடுக்கத் தயங்கவில்லை.

ஆகவே பெற்றோராகிய நாம் சிறுவயதில் இருந்தே பிள்ளைகளுக்கு நன்மையை அறிவிக்க வேண்டும். நாம் அவர்களுக்குச் சொல்லாவிட்டால், இந்தப் பாழும் உலகம் தான் நம்புவதை எல்லாம் நம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்துவிடும். இன்றைய பிள்ளைகள் சீரழிந்ததற்கு தலையாய காரணங் களில் இதுவும் ஒன்று. மனதின் கசப்புக்களால வாயின் வார்த்தைகள் பிழையாக வரும் போது பிழையான அறிக்கைகளால் நம்பிக்கை குன்றிப் போகும்.

நம்பிக்கை வளர நாம் வாயால் அறிக்கை செய்வதில் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் நம் ஆழ்மனதில் எதை விதைக்கின்றோமோ அதையே அறுப்போம்.

ஆகவே எமது நம்பிக்கையை அதிகரிக்க வேத வார்த்தைகளை அறிக்கையிடுவோம். எமது பங்கை நாம் செய்யும் போது இறைவன் விசுவாசத்தை நமக்கு அருள்வார். சூழ் நிலைகள், உள்ளக் கிளர்ச்சிகள், தோற்றங்கள், மனித யோசனைகள் யாவும் நேர் விரோதமாய் இருந்தாலும் வேதத்தையும் அவருடைய வார்த்தையையும் நம்புவது உன்னத விசுவாசமாகும். (தி.ப. 17: 20-25)

விசுவாசத்தினாலன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க இயலாது. ஏனெனில் கடவுளை அணுகிச் செல்வோர் அவர் இருக்கிறார் என்பதையும், அவரைத் தேடிச் செல்வோருக்குத் தக்க கைம்மாறு அளிக்கின்றார் என்பதையும் நம்ப வேண்டும். விசுவாசத்தின் தந்தை எனப்படும் ஆபிரகாம் விசுவசித்தார். அதைக் கடவுள் நீதியாகக் கருதினார் என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

நேர்மையுடையவரோ நம்பிக்கையினால் வாழ்வடைவர், நம்பாதவரோ உள்ளத்தில் நேர்மையற்றவராய் இருப்பர். (அபகூக் 2:4)

சோதனைகளோ விசுவாசத்தின் உணவு. சோதனைகள் வரும்போது நாம் செயற்படும் போது தான் நாம் யாரென்பதை இனம் காணலாம்.

நாம் காணாதவைகளை நம்புவதே விசுவாசம், நாம் நம்புவதைக் காண்பதே விசுவாசத்தின் பரிசு. (புனித அகுஸ்தினார்)

ஆகவே பரிசுத்த ஆவியாரின் துணையுடன் இயேசுவை விசுவசித்து பிதாவின் புத்திரராவோம். அழிவில்லாத, கண்ணுக்குப் புலப்படாத எக்காலத்திற்கும் அரசராயிருக்கின்ற எம் பரலோக பிதாவிற்கு என்றென்றும் மாண்பும் மாட்சியும் உரித்தாகுக. ஆமென் (1 திமொ. 1:17)

## இளையோர் காவியம் 15

உ.றிஜோலியன்

நீ
உலகம் அடிக்கடி நினைக்கிற வீரத்தமிழனின் பிள்ளை
உன்னிடம் வீரம் இல்லை என்று
பலபேர் போடுவது தப்புக் கணக்கு

அடிமேல் அடியடித்தும்
ஓடாமல்தான் நகர்ந்துகொண்டிருந்தது அம்மி
அப்படி நகர்ந்துகொண்டும் இலட்சியம் உடையாமல்
பார்த்துக்கொண்டது தான் வீரம்

நீ மனிதர்களிடம் அல்ல
முடிவுகளை கடவுளிடம் கேட்டுவிட்டு எடு
துப்பாக்கிகளுக்கு மட்டும் அல்ல
ஆன்மீகத்துக்கும் இருக்கிறது
உரிமை மீட்கிற பலம்

உனக்கு அவசரம் அல்ல
இப்போது தேவைப்படுவது காத்திருப்பு
உன் பொறுமை வெறுமையாய் போனாலும்
தர்மத்தைத்தான் ஜெயிக்க வைப்பான் கடவுள்

நீ எந்தப் பக்கம் எழுந்தாலும்
அந்தப் பக்கம் யூதாசுகளின் பார்வை விழும் கவனம்
சுவர் இருந்தால்தான் அரைகுறையாக உள்ள
சித்திரத்தை வரைந்து முடிக்கலாம் நீ

உன்னை நெருப்பாக அல்ல
செருப்பாகவே வைத்திருப்பதுதான்
உலகத்துடைய ரகசியம்
அதனால்தான் ஆபாசங்கள் ஆடம்பரங்கள்
போதைவஸ்துக்களை காட்டி
உன்னை தட்டிக்கேட்காத அளவுக்கு
கட்டிப் போடுகிற திட்டம்

தாவீது கெற்றப்போலுடன் நிற்கின்றான் என்று
கீழ்மட்டத்தில் பார்த்த கோலியாத்து விழுந்தான்
அதுபோது
தமிழன் விறகு வெட்டுகிற
கத்தியோடு நிற்கிறான் என்று
உலகம் காணுகிற கனவு பகற்கனவு

உன்னிடம் யார் வீரம் இல்லாமல் போனாலும்
இயேசுநாதருடைய வீரம் இருந்தால் போதும்
உன்னால் தேசத்துக்கு மட்டும் அல்ல
இந்த உலகத்துக்கே விடியல்... (தொடரும்..)

**சிந்திக்க ஓர் சித்திரம்**



## காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ.அன்புராசா அமதி**

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: வடபுலத்து அரசியல் சூழல் கொஞ்சம் அடங்கி இருக்கின்றதே! காரண மென்ன?**

**பதில்:**வடபுலத்து அரசியல் சூழல் அமை தியாய் இருக்கிறதே தவிர அடங்கிவிட வில்லை! அடுத்த கட்ட மாகாண சபைத் தேர்தல் பேச்சுப் போட்டிக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்! ஏறக்குறைய ஒரு மாதகால பிரசார மேடைகளில் வைத்தே வடபுலத்து அத்தனை பிரச்சினைகளுக்கும் தீர்வைக் கண்டுபிடித்துவிடுவார்கள். 'வாய் சொல்லில் வீரரடி' என்ற பாரதியின் வீரர் கள் இனித்தான் வெளிக்கிளம்புவார்கள். மாகாணசபைத் தேர்தலுக்கு திகதி அறிவிக் கப்பட்டதும், வடபுலத்து அரசியல் சூழல் அடங்கியிருக்காது. அட்டகாசமாய்த்தான் இருக்கும்! ஒரு கட்டத்தில், "இவனுகள் எல்லாம் எங்கடா கிடந்து வந்தானுங்க!" என நீங்களே உங்களைக் கேட்பீர்கள் ஆனந்தன்!

(பிரியா, மன்னார்)

**கே: இன்றைய இளையோர் தான் தோன்றித்தனமாக நடந்துகொள்கின் றார்களே! அவர்கள் திருந்துவ தற்கு வழியிருக்கின்றதா?**

**ப:** இளையோர்களைச்குற்றம்சுமத்துவதை விட்டுவிட்டு அவர்களின் ஆற்றல்களை, திறமைகளை வளர்ப்பதற்கு என்ன வழி வகைகள் உள்ளன என முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும். இளையோரின் சக்தி அணைக்கட்டு அமைக்கப்பட்டு தேக்கி வைக்கப்படும் வெள்ளம் போன்றது! அவ் வெள்ளத்தினை சரியான வாய்க்கால்கள் அமைத்து வயல்களுக்குப் பாய்ச்சக்கூடிய நீராக மாற்றுவது சமூகத்தின் தலையாய பொறுப்பு. இவைகளை விட்டுவிட்டு பழைய பழஞ்சீலை கிழிவதைப்போன்று பறபற வென்று இளையோரைக் குற்றம் சொல்லிக் கொண்டு இருப்பதுதான் பலருடைய பழக்க மாகிவிட்டது. பழிகளைத் சுமத்தாது, வழி- களைக் காட்டுங்கள். அப்போது அவர்கள் வழிக்கு வருவார்கள். பாதை காட்டாமல் பய ணியுங்கள் என்றால், அவர்கள் எப்படிச் சேரவேண்டி இடம்போய்ச் சேருவார்கள்? அதாவது, எப்படி அவர்கள் தங்கள் இலக்கு களை அடைவார்கள்? ஒரு பகுதியினர் தான்தோன்றித்தனமாக நடக்கிறார்கள் தான்! அதற்காக, அவர்களைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தால், ஆயிரமாயிரம் எம் இளையவர்களை எவ்வாறு, எப்போது இலட்சியப் புருஷர்களாக்குவது?

*(குணம், யாழ்ப்பாணம்)*

**கே: வெளிநாட்டு மோகம் பிடித்துத் திரியும் இளைஞர்களுக்கு என்ன ஆலோசனை கூறுவீர்கள்?**

**ப:** குணம், இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சையாகத்தான் தோன்றும்! ஆனால், போய்ப் பார்த்தால்தான் அக்கரை உண்மை யில் எப்படிப்பட்டது என்பது தெரியும். புலம் பெயர் நிலத்தில் நம்மவர்கள் மெழுகுவர்த்தி களாக எரிந்து உருகிக்கொண்டிருப்பதை யாரும் கண்டுகொள்வதில்லை. இங்குள்ள வர்கள் ஒளியைப் பார்க்கிறார்களே தவிர அவர்கள் உருகிக்கொண்டிருப்பதைப் பார்ப்ப தில்லை! வெளிநாடு சென்றவர்களில் பலர் எப்போது தாய்மண் வந்து கஞ்சியைக் குடித்துக்கொண்டு, சோறும் சம்பலும் சாப் பிட்டுக்கொண்டு, நம்மூர் காற்றை சுவாசித் துக்கொண்டு இருக்கலாம் என ஏங்கித் தவிக்கிறார்கள். ஆடத்தெரியாதவன் மேடை சரியில்லை என்றது போலதான் 'வெளிநாடு சென்றால்தான் உழைக்கலாம்' என்று சொல்பவர்களின் எண்ணமிருக் கிறது. பணத்தினுடைய பெறுமதி புலம் பெயர் நாடுகளில் அதிகமாக இருப்பதனால் அங்குள்ள எம்மவர்கள் கொஞ்சம் கல கலப்பாக வந்துபோகிறார்கள். அவர்கள் பணத்தின் பெறுமதி நம்முடையதை ஒத்திருந்தால், இங்கிருந்தே அங்கு பணம் அனுப்பலாம் என்ற நிலையாகிவிடும்! அடுத்த முக்கியமான விடயம், வெளிநாடு களிலிருந்து வருகிற நம்மவர்கள் கொஞ் சம் 'கலர்'றாகவும், கவர்ச்சியாகவும் வந்து செல்கிறார்கள். இவர்களைப்பார்த்தும்பலர் வெளிநாடுசென்றால் தாங்களும் இப்படி யாக வாழலாம், வந்துபோகலாம் எனச் சிந்திக்கிறார்கள்போல! இப்படிவருகிறவர்க ளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் கடன்பட்டுத்தான் தம் உறவுகளைப் பார்க்க வந்துபோகிறார்கள்என்றசமாச்சாரம்கூடப் பலருக்குத் தெரிவதில்லை. வெளிநாட்டு வாழ்க்கை நம்மவர்களில் பலரை கலங் கடித்துவிட்டது. ஆனால், இவ் யதார்த்த நிலைமைகள் தெரியாதவர்கள்தான் வெளிநாடு சென்று உழைக்கவேண்டும் என்ற கனவோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். சொல்லிக் கேட்காத வர்கள் போய்ப் பார்த்துக்கண்டுகொள் ளட்டும்.

(விஜி, வவுனியா)

**கே: வீதி விபத்துகள் குறைவதற்கு வழியே இல்லையா? வீதிவிபத்துக்களை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு நல்லா லோசனை ஒன்றைக் கூறுங்களேன்?**

**ப:** விஜி, வீதிவிபத்துகளைக் குறைப்பதற்கு முதலில் வாகனம் செலுத்தும் வேகத்தைக் குறைக்கவேண்டும். இரண்டாவது வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கவேண்டும். இவை நடைமுறைப்படுத்தப்படாத பட்சத் தில் வீதி விபத்துக்கள் குறை வதற்கு வாய்ப்பில்லை! அடுத்து, வாகனங்க ளைத் செலுத்தும் சாரதிகளுக்கு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்தலாம். குடும்பத்தில் ஒரே பிள்ளையான சிறுவன் சுவஸ்திகன் 2016 ஆம் ஆண்டு மாசித் திங்கள் மூன்றாம் நாள் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இடம்பெற்ற வீதிவிபத் தொன்றில் படுகாயமடைகிறான். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு ஐந்து நாட்க ளுக்குப்பின் உயிரிழந்த சம்பவம் பெரும் சோக நிகழ்வாகப் பார்க்கப்பட்டது, பதியப் பட்டது. அவனின் இறுதிச்சடங்கு ஒன்பதாம் நாள் இடம்பெற்றது. அச்சிறுவனின் பெய ரில், 'இனி ஒரு விதி செய்வோம்' என்ற ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டி ருந்தது. அவ்வாசகத்தினைச் சாரதிகள் வேதசத்தியமாகக் கொண்டால் பலநூறு வீதிவிபத்துச் சாவுகளைத் தடுக்கலாம், நிறுத்தலாம்! அப்பிரசுரத்தில்: "அன்பான வாகனச் சாரதிகளுக்கு அறிவுபூர்வமான வேண்டுகோள். வாகனம்செலுத்தும்போது கைத் தொலைபேசியைத் துண்டித்து, மது அருந்துவதைத் தவிர்த்து, போட்டியை விடுத்து, வேகத்தைக் குறைத்து வாகனத் தைச் செலுத்துங்கள். நீங்கள் விதியை மீறுவதால் என் விதி முடிந்தது. சாதிக்க வேண்டிய என்னைச் சாகடித்து விட்டீர்கள். நானும் உங்கள் குழந்தைதானே, உங் கள் பசிக்குப் பலியானது நானே கடைசி ஆளாக இருக்கட்டும். இப்படிக்கு, இனி உங்களோடுகாற்றாகவாழும் சுவஸ்தீகன்" எனக் கூறப்பட்டிருந்தது. இதனைவிட எதனை நல் ஆலோசனையாகத் தர முடியும்!

*(கண்ணன், மன்னார்)*

**கே: மன்னார் 'சதோச' மனிதப் புதை குழியில் எலும்புக்கூடுகள் தொடர்ந்து எடுக்கப்படுவதாகபத்திரிகைகள்தெரி விக்கின்றனவே! இப்படியே சென்றால் நிலைமை என்னாகும்?**

**ப:** ஐப்பசி 04 ஆம் திகதி வரை 148 எலும்புக்கூடுகள் அகழ்ந்துஎடுக்கப்பட்டதில் 17 சிறுவர்களுடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. மூன்றில் ஒரு பகுதியே இதுவரையில் தோண்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தோண்டும் பணி முடி யத் தொகை எத்தனையாய் இருக்கும் எனக் கணிக்கலாம் தானே! 'இப்படியே சென்றால் நிலைமை என்னாகும்?' எனக் கேள்வி எழுப்பியிருந்தீர்கள்! நிலைமை என்னா கும்? நிலைமை மண்ணாகும்!

*(வசிகரன், யாழ்ப்பாணம்)*

**கே: ஐப்பசி மாதத்தில் ஆசிரியர்களைச் சிறப் பாக எண்ணிப் பார்க் கின்ற மாதமாகும். ஆசிரியத்துவத்தின் உடைய மேன்மையை, சிறப்பை இன்றைய மாணவர்க ளுக்குப் புரியும்படி சொல்ல முடியுமா?**

**ப:** வசிகரன், உலகில் உள்ள பணிகளிலே - தொழில்களிலே என்னைப் பொறுத்த வரை யில் மிகவும் முக்கியமானதும் முதன்மை யானதும் ஆசிரியப்பணியே. ஆசிரியத் தொழிலே! அதனால்தான், 'எழுத்தறிவித்த வன் இறைவன்' என்றார்கள் நம் முன் னோர்கள். கல்வி புகட்டியவரை தெய்வ நிலைக்குஉயர்த்திபெருமைசேர்த்தார்கள். 'மாதா பிதா குரு தெய்வம்' என ஆசானை - ஆசிரியரை புனித நிலைக்கு உயர்த்தி மதிப்பளித்தார்கள் நம் மூதாதையர். 'ஆசு' என்றால் குற்றம், 'இரியர்' என்றால் நீக்கு பவர் என்று பொருள். ஆக, ஆசிரியர் குற் றங்களை நீங்குபவர். அதாவது அறியா மையை நீக்கி, அறிவின்மையைப் போக்கி அறிவை ஊட்டுபவர்தான் ஆசிரியராவார். ஒரு மருத்துவர் தவறிழைத்தால் ஒரு உயிரோ அல்லது சில உயிர்களோதான் போகும். போயிற்றுப் போகட்டும்! அவ்வுயிர் களில் இருந்து பாடம் படித்துக்கொண்டு ஏனைய உயிர்களைக் காப்பாற்ற அவர் கற்றுக்கொள்வார். ஆனால், எதிர்காலச் சிற்பிகளைச் செதுக்கவேண்டிய ஓர் ஆசிரியர் தன் கடமையில் - பொறுப்பில் - அர்ப் பணத்தில் தவறிழைத்தால் ஒரு சந்ததியே தவறிப்போய்விடும்! எனவேதான், கடவுளி டம் மட்டுமல்ல, ஆசிரியர்கள் தங்கள் கடமையிலும் பக்திகொள்ளவேண்டும். ஏனென்றால வித்துக்களாயிருக்கிற மாண வச் செல்வங்களை விருட்சங்களாக்குவது ஆசிரியர்களின் பெரும் தியாகத்திலும் அர்ப்பணிப்பிலும் தங்கியிருக்கிறது பார்த்தீர் களா? ஆசிரியத்துவத்தின் மேன்மையை யும் சிறப்பையும்!

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

## விழித்தெழு விழிகொடுக்க

ஒளி உலகாம் வெளி உலகை காண
கருவறை எனும் இருட்டறையில்
உருப்பெற்ற மனிதா
நிலையில்லா இவ் உலகில்
நீ மட்டும் நிரந்தரமா என்ன?
உன் முடிவு கூட இருட்டறையாம்
கல்லறைதான்.

ஒளி உலகில் உன் விழிகொண்டு
விடியல்கள் பல கண்டாய்
முடிவுதான் இருட்டறையே

மடிந்த பின்னும் ஏன் இருவிழிகள்
ஒளி உணரா விழி உடனே
ஓராயிரம் மக்கள் இவ் உலகில்
ஒருவர் வாழ்விலேனும்
ஒளி கொடுப்பாய்
உன் விழிகொண்டு
மாண்ட பின்னே மக்கிப்போகும்
உன் விழியை தானம் கொடு
தரணியில் தாண்ட பின்னும்
தெய்வமாவாய்...

ம.சேவியர் கதர்ஷன்
யாழ் அடைக்கல அன்னை ஆலயம்



உலகிலே உயிர் பெற்ற அனைத்து ஜீவராசிகளின் தேவைகளும் துலக்கம் பெற்று ஈடேறி வருவதை நாம் கண்கூடாக காண்கின்றோம். அதேவேளை கண்பார்வையற்ற விழிப்புலனற்ற மானிடர் பால் எமது கவனம் ஈர்க்கப்பட வேண்டிய நல்லதோர் வாய்ப்பினை உலகுக்கு துலாம் பரமாக வெளிச்சமிட்டு காட்டுவதே இவ்வெள் ளைப் பிரம்பு தினமாகும்.

உலகில் 1961 முதல் வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 15 ஆம் திகதி விழிப்புலனற் றோருக்கான வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பரம்பரையாக பிறப்பு வழி, விபத்துக்கள், நோய்கள், போர்கள் போன்ற பல காரணி களால் பலர் விழிப்புலன் இழந்த நிலை யில் வாழ்ந்து வருகின்றனர். நடைபெற்று முடிந்தகோர யுத்தத்தில் எமது தாயகப் பிர தேசத்தில் பச்சிளம் குழந்தைகள் தொடக் கம் பல முதியோர்கள் வரை விழிப்புலன் இழந்து வாழ்ந்து வருகின்றனர். இத் தகையோருக்கு விழியாக வெள்ளைப் பிரம்பு காணப்பட்டாலும் அவர்களுக்கு விழியாக வாழவேண்டியது நம் ஒவ் வொருவரதும் தார்மீகப் பொறுப்பாகும். இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பதும் அதுதான்.

எமது தாயகப் பிரதேசத்தில் சுன் னாகம் வாழ்வகம், கைதடி நவீல் பாட- சாலை, புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம் போன்றவற்றில் விழிப்புலன் இழந்த மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்று வருவதுடன், இவர்களில் பலர் பல்கலைக் கழகமும் செல்கின்றனர். மேலும் மாவட் டம், மாகாணம், தேசியம் என நடைபெறு கின்ற பல போட்டிகளில் இவர்கள் பங்குபற்றி விருதுகளையும் பெற்றுள்ளனர்.

**தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்**
**அது தரத்தினில் குறைவதில்லை**
**உன் அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்**
**உன் ஆற்றல் குறைவதில்லை**

என்பதை மெய்ப்பித்து வரும் இவர்களுக்கு நாம் விழியாவோம், வழியாவோம்.

## காவலன் கலசம்

# திருப்பயணத்தில் திருச்சிலுவை



புனித யோசவ் வாஸின் திருச் சிலுவைப் பயணம் 01.09.2018 அன்று மகா கல்கமுவ புனித யோசவ் வாஸ் தேசிய திருத்தலத்திலிருந்து ஆரம்பித்து இலங்கையின் பதின்மூன்று மறை மாவட் டங்களுக்கும் எடுத்துவரப்பட்டு, மீண்டும் 01.11.2018 அன்று கல்கமுவ புனித யோசவ் வாஸ் தேசிய திருத்தலத்தை மீ-ளவும் சென்றடையவுள்ளது.

இந்நிலையில் 18.10.2018 தொடக் கம் 22.10.2018 வரை யாழ்ப்பாணம் மறை மாவட்டத்திற்கு பவனி வரும் இத்திருச் சிலுவை மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு குறிப்பிட்ட ஆலயங்களில் திருப்பலி மற்றும் வழிபாடுகள் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான காலநேர அட்டவணை சென்ற பாதுகாவலன் (30.09.2018) பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் 13ம் நூற் றாண்டு காலப்பகுதியில் தமிழ் மக்கள் சிலர் சிங்கள மன்னனால் தென்னிலங்கைப் பகுதியில் உள்ள கல்கமுவ என்னும் இடத்தில் குடியேற்றப்பட்டனர். மிகப்பெரும் அடர்ந்த காடுள்ள இப்பகுதியில் மக்களின் வாழ்வு பேராபத்தான நிலையில் காணப் பட்டதுடன் குறிப்பாக காட்டு விலங்குகளி னால் மக்கள் தாக்கப்பட்ட அவலகரமான சம்பவங்களும் நடந்தேறியது.

13ம் நூற்றாண்டில் புனித யோசவ் வாஸ் புத்தளத்திலிருந்து கண்டிக்குப் போகும் பாதையில் இம்மக்களைச் சந்தித்து அவர் களை கத்தோலிக்க மறைக்குள் இணைத் துக்கொண்டதுடன், அவர்களை காட்டு விலங்குகளின் பேராபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் முகமாக கல்கமுவ காட்டுப் பகுதியில் சிலுவை ஒன்றையும் நாட்டினார்.

சிலுவை நாட்டப்பட்ட பின்னர் மக்கள் எவ்வித அச்சமுமின்றி அப்பகுதி யில் வாழ்ந்து வந்ததுடன், காட்டு விலங்கு களால் எவ்வித ஆபத்துமின்றி தமது பயணங்களையும் மேற்கொள்ளக்கூடிய தாய் இருந்தது. இதுமட்டுமன்று நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் விசுவாசத்தோடு அச் சிலுவையின் அடியில் உள்ள மண்ணை எடுத்து கரைத்து நோயுள்ள இடத்தில் தட வியும், கரைக்கப்பட்ட நீரை பருகியும் குணம் பெற்றனர். பல அற்புதங்கள் இச் சிலுவையால் மக்களுக்கு நடந்தேறின.

இன்றும் இம்மக்கள் புனித யோசவ் வாஸ் நாட்டிய சிலுவையை தம் மனதில் இருத்தி புனித யோசவ் வாஸின் பரிந்துரையால் எல்லாம் வல்ல இறைவனிடமிருந்து நலம் பெற்று வரு வதை காணக்கூடியதாக இருப்பதுடன், பிறமத சகோதரர்களும் இவ் அற்புதங்க ளைக் கேள்விப்பட்டு இச்சிலுவையின் நிழலில் செபித்து பல நன்மைகளைப் பெற்று வருகின்றனர்.

இத்திருச்சிலுவையின் புனிதத் துவத்தையும் ஆசீர் அளிக்கும் வல்ல மையையும் அறிந்த இலங்கை திரு அவை யின் ஆயர் மன்றம் யோசவ் வாஸ் அடி களாரை புனிதர் நிலைக்கு உயர்த்தும் திருச்சடங்கின்போது இச்சிலுவையை எடுத் துச்சென்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டனர். சிலுவை நாட்டப்பட்ட இடத் தில் தற்போது புனித யோசவ்வாஸ் அடிக ளாருக்கான தேசிய திருத்தலம் அமைக்கப் பட்டு வருகின்றமை நோக்கத்தக்கது.

இத்தகைய புதுமைகள் நிறைந்த புனித யோசவ்வாஸ் நாட்டிய சிலுவையா னது இலங்கையில் உள்ள அனைத்து மறைமாவட்டங்களுக்கும் எடுத்துச்செல் லப்பட வேண்டுமென இலங்கை ஆயர் மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, தற்போது திருப்பயணமாக எடுத்துவரப்படுகின்றது.

எமது மறை மாவட்டத்திற்கு திருப்பயணம் வரும் திருச்சிலுவையை நாம் எல்லோரும் மிகுந்த பயபக்தியுடன் வணங்கி நோய்கள், துன்பங்கள், போரி னால் ஏற்பட்ட வலிகள், வடுக்கள் என்ப வற்றிலிருந்து புதுவாழ்வும் அருள் வாழ் வும் பெற்றுக்கொள்வோம்.

**இ.இ.வசீகரன்**
**ஆசிரியர்**

# கார்மேலில் மலர்ந்த இரு அற்புத மலர்கள்





ஐப்பசி மாதம் உலகெங்கும் வாழ் கார்மேல் துறவற குடும்பத்திற்கு மிகவும் புனிதமானதும் சந்தோசமானதுமான மாத மாகும். திருஅவையின் புனிதர்களின் வரிசையில் மிகவும் பிரபலம் பெற்ற பெண் புனிதர்களான அவிலா தெரேசாவும், 'குழந்தை இயேசுவின்' சிறுமலர் என் அழைக்கப்படும் சின்னத்தெரேசாவும் விளங்குகின்றார்கள். ஆழ்நிலைத்தியான கார்மேல் அருட்சகோதரிகளான இவ்விரு புனிதர்களின் திருவிழா இம்மாதம் 15ம் திகதி நினைவுகூரப்படுகின்றது. இவர்க ளின் அர்ப்பண புனித துறவற வாழ்வின் பொருட்டு திரு அவை இவர்களை புனிதர் களின் வரிசையில் கௌரவப்படுத்தி முதல் பெண் மறைவல்லுனராக அவிலா தெரேசாவையும் தொடர்ந்து சின்னத் தெரேசாவையும் பிரகடனப்படுத்தியுள் ளது. அவிலா தெரேசா தன் ஆழ்ந்த செப அனுபவத்தினாலும், நுண்ணிய அறிவு, அர்ப்பணத்துறவற வாழ்வினாலும் குழு சகோதரர்களுக்கும், பலரது வாழ்விற்கும் வழிகாட்டி பல இடங்களிலும் உள்ள குழு வாழ்வினை சீர்ப்படுத்தி கார்மேலின் மணம் வீசும் புனித மலரானார்.

சின்னத் தெரேசா நான்கு சுவர்கள் மத்தியில் அன்பான, அமைதியான சேவை யினால் 'சிறிய வழியினை வாழ்ந்து காட்டி குறுகிய வருட துறவற வாழ்வில் செபம் மூலம் உலகம் முழுவதையும் அரவணைத்து கார்மேல் தோட்டத்தில் அழியா முத்திரை பதித்து அன்புள்ள புனிதரானார்.

இறைவன் இவர்கள் இருவரை யும் வெவ்வேறு கால கட்டத்தில் வேறுபட்ட குடும்ப சூழலிலிருந்து அழைத்து வெவ் வேறு பணிகளுக்கான ஆசீர்களைப் பொழிந்து அவர்கள் வாழ்வின் நோக் கத்தை தன் சித்தப்படி நிறைவேற்றினார் .

15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற் பட்ட கல்வி மறுமலர்ச்சியும், கைத்தொழில் புரட்சியும், மதசீர்திருத்தமும், நாடுகாண் பயணங்களும் அங்கு வாழ்ந்த மக்கள் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்திய துடன் விஞ்ஞான வளர்ச்சி அவர்கள் சமய வாழ்வில் தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இவ்வாறான சூழ்நிலையில் ஸ்பானிய நாட்டின் அவிலா நகரில் செல்வச் செழிப்பு டன் வாழ்ந்த பிரபு வம்சத்தில் அல்போன்ஸ் அல்மெயிடா தம்பதினருக்கு அன்பு மக-ளாக தெரேஸா பிறந்தாள். மிகவும் கண் டிப்பும், எளிமையும், பக்தியும் மிகுந்த அவர் தந்தை தேவையான அனைத்து வசதிகளையும் கொடுத்து விசுவாசம் நிறை சூழலில் தெரேசாவை வளர்த்தார். தந்தை வழி தொடர்ந்து நூல்கள் வாசிப்பதில் தன் நேரத்தை செலவழித்தார். பன்னிரண்டாவது வயதில் தாயை இழந்த அவர் சகோதரியின் பராமரிப்பிலும் பின்னர் தந்தை வேண்டுகோள்படி அகுஸ்தீனிய அருட்சகோதரி விடுதியிலும் தன் உருவாக் கத்தைப் பெற்றுக்கொண்டார் தன் இள மைப்பருவத்தில் இறைவன் குரல் அழைத்த போதும் அதற்கு செவிமடுக்க அவர் விரும்பவில்லை. நீண்ட நாட்களாக தன் உள்ளத்தில் எழுந்த போராட்டத்தின் இறுதியில் தன் ஆசைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு இறைவன் குரலுக்கு செவிமடுத்தார். இவரது முடிவினை ஏற்க மறுத்த தந்தையின் முடிவிற்கு மாறாக தன் சகோதரன் துணையுடன் அவிலா விலுள்ள ஆழ் நிலைத்தியான கார்மேல் கன்னியர் மடத்திற்கு சென்றார்.தெரேசா இக்கார்மேலில் நுழைந்த பொழுது அங்கிருந்த அருட்சகோதரிகள் அவரை வரவேற்றனர். ஏறக்குறைய 140 அருட் சகோதரிகள் வாழ்ந்த அககுழு வாழ்வில் கார்மேலின் கட்டுப்பாடு தளர்ந்த நிலை யில் இவர் தன் பெரும்பான்மையான நேரத்தை நண்பர்கள் உறவினர்களுடன் செலவழித்தார்.செபவாழ்வில் ஏறக்குறைய 20 வருடங்களாக எவ்வித இறை அனுபவ முமில்லாது அர்த்தமற்ற வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்தார். இறைவன் தக்க சமயத்தில் அவர் வாழ்வில் ஊடுருவி, இறையருளினால் அவரைத் தன் வச மாக்கினார். துறவற செபவாழ்வின் அர்த் தத்தை உணர்ந்தவராக அனைத்தையும் ஒதுக்கி வைத்து இறை விசுவாசத்தில் ஆழமாக வளரத்தொடங்கினார்.

கார்மேல் துறவற குழுவாழ்விலிருந்த உலகியல் தொடர்புகளையும் தளர்ந்து போன சட்டங்களையும் சீராக்கி ஆரம்ப கால இறுக்கமுள்ள துறவற வாழ்க்கை முறைகளை மீண்டும் உள்ளீர்க்க முனைந் தார். அவருக்கு ஏற்பட்ட தடைகள் சவால் களை இறைவனின் துணையுடன் எதிர் நோக்கி, அதன் புனிதத்துவத்தைப் பேணி புத்துயிரை கொடுக்க விழைந்தார்.ஏறக் குறைய 16 பெண் துறவிகளின் இல்லங் களினதும் 14 ஆண் துறவிகளின் இல்லங் களினதும் குழுவாழ்வில் ஆன்மீக வாழ் வில் மாற்றத்தை கொண்டு வந்தார். ஆழ்நிலை கார்மேல் குழுவிற்கு புத்துயிர் கொடுத்த ஆளுமை திறனுள்ள ஒரு வீரப் பெண்மணியாக அவிலா தெரேசா வர லாற்றில் தடம் பதித்தார். அதுமட்டுமன்று இவர் எழுதிய "நிறைவிற்கான வழி", "உள்ளார்ந்த அரண்மனை" போன்ற அவரது நூல்கள் செபிப்பது எப்படி என்ற வழிவகையினையும் ஆன்மா எவ்வாறு தியானம் மூலம் பல இடையூறுகளைக் கடந்து இறைவனுடன் சங்கமமாகின்றது என்பது பற்றியும் விளக்குகின்றது. இவரின் புனித வாழ்வும், இறை ஞானத்தை வெளிப்படுத்தும் நூல்களும் இவரைத் திருஅவையின் முதல் பெண் மறை வல்லுனராக உயர்த்தியுள்ளது.

குழந்தை இயேசுவின் சிறிய மலர் என அழைக்கப்படும் சின்ன தெரேசாவின்

**அருட்சகோதரி பவளராணி ஞானப்பிரகாசம் அ.கா**

வாழ்வு முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. பிரான்ஸ் லிசியோ எனும் ஊரில் திரு திருமதி மாட்டீன் என்பவர்களின் கடைக்குட்டியாக பிறந்த இவரது வாழ்வு சிறு வயதிலிருந்தே இயேசுவுடன் ஒன்றுபட்ட வாழ்வாக இருந்தது.

பெற்றோர் இறை அழைத்தல் பெற்று பின்னர் இறைசித்தப்படி திருமணம் செய்து ஒன்பது பிள்ளைகளைப் பெற்றபோதும் முதல் நான்கு ஆண்களும் சிறுபராயத்தில் இறந்துவிட ஐந்து பெண்களும் ஒருவர் பின் ஒருவராக இறை அழைத்தலுக்கு செவிகொடுத்து துறவிகளாயினர். இவ்வா றான ஒரு பக்தி மிகுந்த குடும்ப பின்ன ணியில் பிறந்த சின்ன தெரேசா சிறு வயதிலிருந்தே செபவாழ்விலும் இயற்கை யிலும் இறைமகன் இயேசுவை அனு பவித்து ஒன்றித்த வாழ்வை வாழ்ந்து வந்தார். நான்கு வயதில் தாயை இழந்த அவர் தந்தையின் அன்பிலும் சகோதரிக-ளின் பராமரிப்பிலும் வளர்க்கப்பட்டார். விண்ணக இன்பத்தையும் இறைவனின் பிரசன்னத்தையும் அனுபவித்து வாழ்ந்த அவர் தன் திடீர் வியாதியின்போது இறை அன்னையின் பராமரிப்பினால் நற்சுகத்தை பெற்ற அவர் தேவதாயாரில் மிகுந்த பக்தி யுடையவரானார். தன் சகோதரிகள் துற வற அழைப்பை பெற்று சென்றதும் தான் மிகவும் நேசித்த தந்தையினை பிரியமன தில்லாதிருந்த போதிலும் இறை அழைப் பிற்கு தன்னை கார்மேலில் அர்ப்பணிக்க விருப்பம் கொண்டார்.

இவரது இளவயது தடையாக இருந்த போதிலும் பாப்பரசரின் விசேட அனுமதி யுடன் லிசியோ நகர கார்மேல் இல்லத்தில் தன் பதினைந்தாவது வயதில் நுழைந்தார். எட்டு வருட துறவற வாழ்வினை அர்ப்ப ணத்துடன் வாழ்ந்து தன் இருபத்துநான்கு வயதில் ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்த விண்ணக வாழ்விற்குள் நுழைந்தார்.

எட்டு வருட அவரது துறவற வாழ்வு கார்மேல் குடும்பத்தில் ஏன் திருஅவையின் வரலாற்றில் மிகப்பெரும் தாக்கத்தை உரு வாக்கியது எனலாம். கார்மேல் கன்னியர் இல்லத்தினுள் வாழ்ந்த அவர் தன்னுடைய நாளாந்த வாழ்வில் தான் செய்த சிறிய செய்கைகளை அன்புடன் இறைவன் மேலுள்ள விருப்புடன் உலகில் இருக்கும் பாவிகளின் ஈடேற்றத்திற்காகவும் ஒப்புக் கொடுத்த அவரது தாராள மனதினால் பலர் மீட்பு பெற்றனர். திருஅவைக்காகவும் குருக் களுக்காகவும் அவர் இறைவனிடம் செபித்து உலகையே தன் செப வாழ்விற் குள் உள்ளடக்கினார். அதனால் திருஅவை அவரின் மறைபரப்பு ஆர்வத்தை மதித்து அவரை மறைபரப்பு நாடுகளின் பாதுகாவ லராக பிரகடனப்படுத்தியது.

அதுமட்டுமன்று அவரது இறையியல் கோட்பாடுகள் ஏனைய மறைவல்லுனர்கள் போன்று நூல்களில் எழுதப்படவில்லை. தான் எழுதிய தன் சுயசரிதையில் இவர் எவ்வாறு இறைவனை அன்பு செய்தார் ஏற்றுக்கொண்டார். தனக்கு ஏற்பட்ட அவ மானங்களை எவ்வாறு இறைவனுக்காக தாங்கிக்கொண்டார் என்பதனை தெளி வாகக்கூறியுள்ளார். இவரது இந்த "சிறிய வழி" எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாக இருப்பதனால் அவரது இந்த புனித வாழ்வினால் திருஅவை புனித அவிலா தெரேசா போன்று இவரை யும் மறை வல்லுனர் என பிரகடனப் படுத்தியுள்ளது. கார்மேல் தோட்டத்தில் மலர்ந்த இவ்விரு அழகிய புனித மலர்கள் இறைவனால் அழைக்கப்பட்டு கொடுக்கப்பட்ட வேறுபணியினை அர்ப்பணத்துடன் நிறை வேற்றியதனால் திருஅவையின வர லாற்றில் புனிதராயுள்ளனர்.




**ஊர்காவற்துறையில் முதல் மகா ஞானொடுக்கம்....**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இப்படியான நேரத்தில் ஆயர் செமேரியாவுக்கும் அவரது குழுவினருக்கும் உந்து சக்தியாக விளங்கியது அவர்களது சபை நிறுவுநர் ஆயர் புனித யூஜின் டி மசனட்டின் உற்சாகமூட்டும் வார்த்தைகளும் செயல்களுமாகும். அவரின் கருத்துப்படி மறையறிவிப்புப் பணி முறையில் மிகவும் கடினமானதும், அதே வேளையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதும் இந்த மகா ஞானொடுக்க முறைமையே என்பதைத் தமது அனுபவத்தால் உணர்ந்தவர். இப்பணியில் தாம் எதிர்கொண்ட தடைகள் பற்றி அவர் தமது மடல்களில் அடிக்கடி குறிப்பிடுவது வழக்கம். எனவே நிறுவுனரின் இந்த உற் சாகம் அளிக்கும் வார்த்தைகளினால் ஆயர் செமேரியாவும் குழுவினரும் எதிர்ப்புக்களைக் கண்டு மனம் சலிக்காது புது நம்பிக்கை பெற்றவர்களாக இன்னும் கூடுதல் உத்வேகத்துடன் தமது பணியை முன்னெடுத்தனர்.

முதலில் பெண்கள் வெளிப்படுத்திய நல்லெண்ணத்தை ஆயர் செமேரியா அவர்கள் முழுமையாகப் பயன்படுத்தினார். மறையுரைகள் வழியாகவும் அவ்வப்போது வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் வாயிலாகவும் அவர்கள் தமது தகுதியை வெளிப்படுத்தும் போது அவர்களுக்கு அருளடையாளங்களை வழங்கி இறைவனுடனும், அயலவருடனும் ஒப்புரவாகுவதற்கு ஆயரும் குழுவினரும் ஏற்பாடு செய்தனர். மறையுரைஞர்களின் நம்பிக்கைக்கேற்ற கைமாற்றை இறைவன் வழங்கினார். இந்த சாதாரண பெண்கள் தமக்கு மறையுரைகள் வழியாக வழங்கப்பட்டு வந்த உன்னதமான மறையுண்மைகளை உணர்ந்து தெளிந்தவர்களாக இதுவரை தாம் வாழ்ந்து வந்தது மிகவும் போலியான வாழ்க்கை என்பதை உணர்ந்து நல்லாயனாகிய கிறிஸ்துவின் பாதத்தில் சரணடைந்து உண்மையான மனத்துயருடன் தமது அமைச்சலீனத்திற்கு மன்னிப்பு வேண்டினர். கிராம மக்கள் அனைவரினதும் பாவங்களுக்குப் பரிகாரமாக கிராம வீதிகள் வழியாகச் சென்ற திவ்விய நற்கருணைப்பவனி உறக்க நிலையிலிருந்த அவர்களது இறை நம்பிக்கையைத் தட்டியெழுப்பியது. மிகவும் கடும் போக்கைக் கடைப் பிடித்து வந்த கிளர்ச்சியாளர்கள் தம்மையும் விளம்பரப்படுத்தி வெளிப்படுத்துவதற்காக நற்கருணைநாதர்செல்லும்பாதைகளைத் தம்மால் இயன்ற அளவுக்கு அலங்கரித்து சோடித்திருந்தனர். இச்செயற்பாடு ஆயர் செமேரியா குழுவினருக்குச் சற்று ஆறு தலைக்கொடுத்திருக்க வேண்டும். எனினும் நற்கருணைப்பவனி மற்றும் வழிபாடுகள் இடம்பெற்ற வேளையில் ஆண்கள் இன்னமும் தமது ஏனோ தானோ என்ற மனப்பான்மையின் பிடியிலிருந்து விடுபடாதிருந்த போதும். பெண்களின் செயற்பாடுகள் ஆறுதல் அளிப்பதாய் இருந்தன. அவர்கள் தமது பாவங்களுக்கான ஆழமான மனத்துயரைத் தமது பக்திபூர்வமான செபங்களினால் குரலெழுப்பி இறைவனின் இரக்கத்தை வேண்டிய வண்ணமிருந்தனர். இறைவனின் குரல் இவர்களில் செயலாற்றியதை ஆயர் செமேரியா குழுவினர் உணர்ந்து கொண்டனர். சில நாட்களில் அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனத்துயர் அடைந்தவர்களாகக் கூட்டம் கூட்டமாக ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறவரலாயினர்.

ஏறக்குறைய 400 பேர் திவ்விய நற்கருணைவிருந்தில் பக்தி பூர்வமாகப்பங்கெடுத்ததைக் கண்ட எல்லோருமே பொது ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறுவதில் நாட்டம் கொண்டனர். இவற்றின் போது இவர்கள் வெளிப்படுத்திய பக்தி, ஆழ்ந்த நம்பிக்கை, பராக்குக்களில்லாத செபம் எல்லாம் ஆயர் செமேரியா குழுவினருக்குப் பெரும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது.

பெண்களைப் பொறுத்தளவில் ஏற்பட்ட இம்மாற்றம் ஆயர் செமேரியா குழுவினருக்கு நம்பிக்கையளிப்பதாக, மகிழ்ச்சியைத் தருவதாக இருள் நடுவே தோன்றிய ஒளிக்கீற்றுப்போல தென்பட்டாலும் இது ஒரு ஆரம்பம் மட்டுமேயென்றும் இன்னும் செல்ல வேண்டிய தூரம் நிறைய உண்டு என்பதையும் உணர்ந்தனர். ஆன்மீக விடயங்களில், உண்மையான இறையுணர்வு சம்பந்தமான விடயங்களில் வருடக்கணக்கில் அக்கறையே இல்லாத ஆண்களை அசைப்பது மிகமிகக் கடினமாகவேயிருந்தது. வழிபாடுகள், மன்றாட்டுக்கள், மறைஉரைகள், தனிப்பட்ட சந்திப்புக்கள் எவையும் கடின உள்ளம் கொண்டிருந்த ஆண்களின் இதயங்களை இளகச்செய்யவில்லை. அறிவுரைகளுக்கும் மறையுரைகளுக்கும் வருகை தந்திருந்த சில ஆண்களும் ஆயர், குருக்கள் குழவினர் வந்து விட்டார்களேயென்று அவர்களுக்கு மரியாதை செலுத்தவும், ஏன் அவர்களுக்கு ஒரு சலுகை செய்வதற்காகத்தான் தாம் வருவதாகவும் எண்ணினர். அத்துடன் இம்மகா ஞானொடுக்கம் பெண்களுக்கான 'நிகழ்ச்சியுடன்' முற்றுப்பெறும் என்றும் ஆண்கள் தாம் வெளிப்படுத்திய முரண்டுபிடிக்கும் பிடிவாதத்தினால் மகா ஞானொடுக்க குழுவினர் தமது பிடியைத் தளர்த்தித் திரும்பிச்சென்று விடுவார்கள் என்றும் கணக்குப்போட்டார்கள். ஆயினும் ஆயரும் மற்றும் அவரது குழுவினரும் தமது மகாஞானொடுக்கம் பற்றி ஊர்காவற்துறை ஆண்களது கணிப்பு தவறு என்று காண்பிக்கத் தொடங்கினர். தமது உயிர்களைக் கையளிக்கவேண்டியிருந்தாலும் இம்மகா ஞானொடுக்கத்தினால் முழுமறைத்தளத்திலும், எல்லா மட்டத்திலும் முழு மனமாற்றத்தை ஏற்படுத்தாமல் பின்வாங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லையென்று பணியைத் தொடரலாயினர்.


**அருட்பணி S.V.B. மங்களராஜா**

மகாஞானொடுக்கப் பணியை இங்கு மேற்கொள்வதில் ஆயரும், குருக்களும் எதிர்கொண்ட பிரச்சினையின் காரணங்களை ஆராயும் போது அவை அவர்களின் கண்ணோட்டத்தில் பின்வருபவையாக இருந்தன.

மறையுண்மைகள் பற்றிய சரியாக புரிதல் இல்லாமை, அப்பகுதி மக்களுள் (கீழைத்தேச மக்கள்) பொதுவாக உள்ள நேர்மையீனம், ஏமாற்றுவேலை, சாதி சம்பந்தமான விடயங்களில் மிகவும் மோசமான முன்சார்பு எண்ணங்களும் எவருக்கும் பணிய மறுக்கும் மனப்பான்மை ஆகியவை உள்ளன. அத்துடன் அவர்கள் தமது தொழிலின் காரணமாக நீண்ட கடற்பயணங்களை மேற்கொள்வதால் இவர்கள் ஐரோப்பிய கடற்பயணிகள் கடைப்பிடித்து வந்த சில தீய செயற்பாடுகளை தமதாக்கிக்கொண்டனர். அவை மனிதர்களுக்கு மட்டும் மதிப்பளித்தல், புனித இடங்களை, ஆட்கள், பொருட்கள் போன்றவற்றை வெறுத்தல், சமயங்களைப் பொறுத்தளவில் ஏனோ தானோ என்ற மனப்பான்மை, தமக்குத் தான் எல்லாம் தெரியும் என்ற தற்பெருமை போன்ற குண்ணங்கள் அவற்றுள் சில. அத்துடன் பசாசின் பிடியில் இவர்கள் இருந்தமையால் 6ம் 7ம் கற்பனைகளைப் பொறுத்தளவில் இவர்களுடைய அணுகுமுறைகள் பற்றிச்சொல்ல வேண்டியதேயில்லை. எனினும் இவற்றின் மத்தியிலும் சில ஒளிக்கீற்றுக்கள் தென்படாமலில்லை. சில ஆண்கள் குருக்கள் தங்களுக்கு, தங்களுக்காகச் செய்து வந்த நன்மைகளைப் புரிந்து கொள்ளத் தொடங்யிருந்தார்கள். குறிப்பாக பெண்கள் முன்னெடுத்த அன்னை மரியாளின் திருச்சுரூபப் பவனியின் போது இந்த ஆண்கள் எவருடைய தூண்டுதலும் இல்லாமல் முழந்தாட்படியிட்டு பக்தி வணக்கத்தடன் நடந்துகொண்டனர். மற்றும் இவர்கள் வெளிப்படுத்திய சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான செயற்பாடுகள் ஆயர் மற்றும் குருக்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தன.

(தொடரும்....)

# நண்பனுக்கு ஓர் மடல்



*அன்பு நண்பா,*

உமது உள்ளக் கிடக்கைகளை பகிர்ந்துகொள்ள பல சந்தர்ப்பங்கள் கிடைத்தாக கூறி இருந்தாய். அதில் உமது கருத்துக்களை வெளிப்படுத்தியமைக்கு நன்றி.

இளமை என்பது குறிப்பிட்ட கால எல்லை மட்டும் தானே அனுபவிக்க முடியும். இயேசு கிறிஸ்துவும் தனது இளமை பருவத்தில் பல்வேறு பணிகளில் குடும்பமாக இணைந்து செயற்பட்டார் என்பதை நற்செய்தி வாயிலாக அறிவாய். தனது குடும்ப நிலைக்கு ஏற்ப தந்தைக்கு துணையாக தொழிலிலும் இணைந்து செயற்பட்டதை சில வரைபடங்களும் வெளிப்படுத்தும். இது போலவே குடும்பத்தில் இணைந்து விவசாயம், கடற்றொழில், சுயதொழில்களில் பங்கேற்று வருவது இன்றும் பலரது பங்கேற்பாக காணப்படுகிறது. இதுபோலவே சமூக முன்னேற்றத்திலும் பங்கேற்று சங்கங்கள், இளையோர் கழகங்கள் மூலம் பணிகள் பல செய்து மக்களை மகிழ்விப்பதிலும், சிறுவர்களை வழிகாட்டுவதிலும் முன்நிற்பது பாராட்டத்தக்கது. இதில் இணையாது ஒதுங்கி வாழ்வோரை காணும் போது அவர்களை திசைதிருப்பி தவறான வழிகாட்டலில் இணைக்க பல முயற்சிகள் நடைபெறுவதை பத்திரிகை செய்திகளில் காணமுடிகிறது அல்லவா?

இவை பற்றி கவனம் செலுத்தாது ஒதுங்கும், ஒதுக்கும் நிலையில் தானே எமது சமய சமூக சீர்கேடுகள் பெருகுகின்றன. சமய விழுமியங்களைக் கடைப்பிடிக்காது சிறு வயது முதல் அன்பை செலுத்துவதாக எண்ணி அவர்களுக்கு ஆன்மீக குடும்ப பொறுப்புக்களில் பங்கேற்க தவறியதால் ஏற்பட்ட விளைவுகளை தான் இன்று அறுவடை செய்கிறார்கள். குடும்பத்துடன் இணைந்து செயற்பட வைக்காமை தானே எந்த அனுபவ தொழிலையும் தெரியாது தொழில் தேடும் அவலம் ஏற்படுகிறது. வெளிநாட்டு மாயையும், அரச தொழிலுக்காக அலையும் நிலையிலும் தமது குடும்ப, சமூக, சமய விழுமியங்களை தொலைத்தவர்களாக வளரும் இளையோரை குறை கூறுவதை விட பொறுப்புள்ளோரின், பொறுப்பற்றோரின் செயல்களும் காரணமானது என்பதனை உன் இளமைக் காலத்தில் மீட்டுப்பார்க்க கிடைத்த சந்தர்ப்பங்களே இவையாகும்.

வழிபாடுகள் இறை வேண்டுதல்களாக மட்டுமல்ல தவறிச் செல்லும் ஒருவரை யாவது உன் அன்புச் செயல்களால் மாற்றிக்கொள். தவறு செய்பவரை விட அதனை கண்டும் காணாதவராக ஒதுங்குவோரும், சமூக சீரின்மையின் பங்காளரே என்பதை உணர்ந்துகொள். ஒவ்வொருவருக்கும் வழிபாட்டை வாழ்வாக்க கிடைத்த அழைப்பே இக்காலமாகும். இதை உணர்ந்து செயற்பட முன்வருவோரது பணிகளை எம்மோடும் பகிர்வீர் என்ற ஆவலுடன் அடுத்த மடலில் சந்திக்கின்றேன்.

அன்புடன்
செ.யோசப்பாலா
உளச் சமூகச் சீராளன்

இயேசுவின் இறப்பு வரை சிலுவை என்பது துன்புறுத்தல், அவமானம் மற்றும் மரணத்தின் சின்னமாக விளங்கியது. இயேசுவின் இறப்பின் பின் சிலுவை நிலைவாழ்வின் சின்னமாகியது. அருள்தரும் பேரின்பத்தின் சின்னமாகியது. ஒளியின் சின்னமாகியது. நல்லிணக்கத்தின் சின்னமாகியது. இவ்வுலகில் காணப்படும் பலவிதமான பல் கலாசாரங்களுக்கு உட்பட்ட சிலுவைகளைப் பற்றிய மறை அறிவையும், ஆன்மீக அறிவையும், அனுபவத்தையும் மையமாகக் கொண்டு பல்வேறு வகையான சிலுவைகளின் வடிங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் காட்சிப்படுத்தியது மட்டுமன்றி, **சிலுவைளின் சரித்திரம்** என்னும் நூலிலும் பதிவு செய்துள்ளேன். **அருட்பணி சிசில் ஜோய் பெரேரா, அதிபர்,**
**"தஹம் செவன" இடைநிலைக் குருமடம், களுத்துறை.**



"எனது சீடராக வரவிரும்பும் எவரும் தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" - இயேசுக்கிறிஸ்து

## அன்னை மரியாளின் சிலுவை

இயேசுவின் அன்னையான தூய மரியாளே இயேசுவோடு மிக நெருங்கிய நபராக உலகில் வாழ்ந்தவர். தாயாக மட்டுமல்லாது அவரது முதல் சீடராகவும் விளங்கியவர். தனது மகனின் பிறப்பிலிருந்து இறப்பு வரை அவருடனே இருந்தது மட்டுமல்லாது திருச்சபையின் ஆரம்பத்திலிருந்தே திருத்தூதர்களுடன் பயணித்தவர். மீட்பு வரலாற்றிலே அன்னை மரியாளின் பங்கு மிக முக்கியமானது. தனது மகனை விட்டு விலகாது, கல்வாரி மட்டும் சென்று அவரது பாடுகள், மரணத்தை தனது உள்ளத்தில் சுமந்து இறுதியில் தனது மகனின் வெற்றுடலை மடியிலே தாங்கி நின்றவர் அன்னை மரியாள். இதனால் மரியாளின் சின்னம் சிலுவையில் பொறிக்கப்பட்டது ஆச்சரியப்படுவதற்கு உரியதல்ல. மரியாள் சிலுவையை விருப்பத்துடன் ஏற்று, அச்சிலுவையின் வழியை எமக்கு முன்மாதிரிகையாகக் கொடுத்திருக்கின்றார். இயேசுவின் சிலுவையை யாரெல்லாம் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களுடன் அன்னை மரியாள் வழிநடந்து சென்று அவர்களுக்கு பலத்தையும் ஊக்கத்தையும் அளிக்கிறார்.

இது தாயின் சிலுவை (Mater Cross), ஒற்றுமையின் சிலுவையென பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இது ஒற்றுமையின் சிலுவையென அழைக்கப்படுவதற்கு பாஸ்கா மறைபொருளில் இயேசு மற்றும் மரியாளின் ஆன்மீக ஒன்றிப்பு காணப்படுவதே காரணமாகும். "M" என்ற எழுத்து மரியாள் இயேசுவின் சிலுவையடியில் நின்றிருந்த நிலையையும், வியாகுல அன்னையும் (Mater Dolorosa) என அன்னை கொண்டிருந்த அழைத்தலையும் குறித்து நிற்கிறது. மரியாளுடன் மிக நெருக்கமான பாப்பானவராக கொள்ளப்படும் திருத்தந்தை 2ம் யோன் பவுல் தனது தனித்துவச் சின்னமாக கொண்டிருந்த இலட்சினையில் சிலுவையின் வலது பக்கத்தில் "M" என்ற வடிவத்தை கொண்டிருந்தார்.



# மரியதாய் வேண்டிடவே

**வன்னிவாழ் இதயம்**
**ம. சூசைமுத்து**

இஸ்ராயேல் நாட்டில் யூத வழக்கத்தின் படி திருமண நாள் புதன்கிழமை. மாலையில் மணமகன் தன் தோழர்களுடன் மணமகள் இல்லத்திற்குச் சென்று மணமகளை ஊர்வலமாக அழைத்து வருவான். மணமகள் வலது கால் எடுத்து வைத்து மணமகனின் இல்லத்தில் நுழைந்தவுடன் இன்னிசை முழங்கத் திருமணவிருந்து நிகழ்வு இடம்பெறும். விருந்தின் சிறப்பு அம்சமாகத் திராட்சை இரசம் வழங்கப்படும்.

இறைமகன் இயேசு தமதுபொது வாழ்வுப் பணியைத் தொடங்கிய பின் ஒரு புதன்கிழமை மாலை நேரத்தில் நாசரேத்திற்கு வடக்கே ஏழு மைல் தொலைவில் கலிலேயாவில் கானா என்ற ஊரில் திருமணம் ஒன்று நடைபெற்றது. மணமகன் வீட்டார்க்கு உறவுமுறையான இயேசுவின் தாயான மரியா திருமண நிகழ்வுக்குத் துணை நிற்பதற்காக முன்னரே அங்கு சென்று விட்டார். திருமண விருந்திற்கு அழைக்கப்பட்ட இயேசுவும், சீடர்களும் உரியநேரத்தில் திருமண விருந்திற்கு வந்து கலந்து கொண்டனர்.

மணமகனுக்கு அந்த ஊரில் நல்ல செல்வாக்கு இருந்தது. அங்கு விருந்தினர் கூட்டம் அலைமோதியது. திராட்சை இரசம் தாராளமாய் வழங்கப்பட்டது.

திருமண இல்லம் பின்வரும் நிலைமையில் காட்சி தந்தது...

பூக்களைக் கரும்புபோல்
புதுமணத் தம்பதியைச் சுற்றி
தேக்கிய உறவோர் கூட்டம்
சிறுவர்கள் தம் கொண்டாட்டம்
ஆக்கிய உணவில் நல்ல
அறுசுவை உண்டா என்று
பார்க்கின்ற முதியோர் கூட்டம்
பலவாறாக குவிந்த இல்லம்
முன்னலங்காரம் என்ன முகப்பலங்காரம் என்ன
பின் அலங்காரம் என்ன பெருகிய மாதர் கூட்டம்
தன்னலங்காரம் காட்டும் தனி அலங்காரம் என்ன
இன்னவாறிருந்த வீட்டில்
விருந்துண்ணும் நேரம் வந்தது
புதுத்தேனில் பழங்கள் போட்டு
பூரித்து விழுங்குவோரும்
மதுச்சாறு திராட்சைச்சாறு
மயங்கியே அருந்துவோரும்
மிதிக்கத்தானும் இடம்இல்லாது
விரைந்தோடி உண்ணும் போது
மதுச்சாறு குறைந்ததென்று
மயங்கினர் மணவீட்டாரே

இதேவேளையில் திருமண வீட்டிற்கு வருகை தந்தோரில் பெரும்பாலானோர் வசதி படைத்தவர்கள். இருப்பினும் அவர்களில் எவரேனும் அவசர தேவைக்கு முன்வந்து உதவி செய்யவில்லை. இந்நேரம் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மரியன்னை பதைபதைக்கும் உள்ளத்தோடும், துடி துடிக்கும் நெஞ்சத்துடனும் வேறு வழியின்றி



தமது மகனை நோக்கி ஓடி வந்து அவரைத் தனியாக அழைத்து, "மகனே! திராட்சை இரசம் தீர்ந்து விட்டது திருமண வீட்டார்க்கு என்ன செய்வதென்று தெரியவில்லை" என்றார். அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து பண்புடன் மண விருந்திற்கு வந்தவர் இயேசு. அவருக்கு வீட்டில் எதுவுமில்லை. தச்சுத்தொழில் செய்து வாழ்க்கை நடத்தியவர். இவ்விடயம் தமது தாயாருக்குத் தெரியாதா? ஒருவேளை தமது மகன் இறைமகன் என்னும் வகையில் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய விரும்புகிறாரோ? அப்படியானால் வானகத் தந்தையை மகிமைப்படுத்தும் நேரம் வந்துவிட்டதா? என்றெல்லாம் அவர் மனக்கண்முன் பல எண்ணங்கள் தோன்றின. எனவே இயேசு தாயிடம் "அம்மா எந்த உறவில் இதைப்பற்றி தாங்கள் என்னிடம் பேசுகின்றீர். தந்தையை மகிமைப்படுத்த வேண்டிய நேரம் இன்னும் வரவில்லை என்று கூறினார்". ஆயினும் இறைவனது மகிமையை வெளிப்படுத்த இதைவிட சிறந்த நேரமில்லை. நேரம் வந்துவிட்டது என்ற கருத்தில் மரியாள் அங்கிருந்த பணியாளர்களிடம் "இயேசு என்ன சொல்கிறாரோ அதன் பிரகாரம் செய்யுங்கள்" என சொல்லிவிட்டு உள்ளே சென்றார்.

அங்கே கை, கால் கழுவுவதற்காக 6 கற்சாடிகள் இருந்தன. அவற்றை நன்னீரால் நிரப்பும் வண்ணம் இயேசு கூறினார். அவர்கள் அவ்வாறு செய்தபின் இயேசு தந்தையை நோக்கி செபித்து. ஆசீர்வதித்தபின் மக்களுக்குப் பரிமாறுங்கள் என ஒப்படைத்தார். இதுவரை அருந்தாத, அறியாத, மிகவும் அருமையான திராட்சை இரசமாக தண்ணீர் மாற்றம் பெற்றது.... ஆம் ... உலகம் அனைத்திலும் தலைமகனாம் இறைமகன் இயேசு, தண்ணீர் மகள் என்ற தலைவியை நோக்கியவுடன் அவள் நாணிச் சிவந்து தலைகுனிகிறாள். தொட்டதை எல்லாம் பொன்னாக்கி துலங்க வைக்கும் இயேசு இதோ நீரைத் தொட்டு திராட்சை இரசமாக்கி புதிய தெய்வீக திருமண விருந்தை, புதிய அருள் வாழ்வை, உள்ளம் களிக்கும் நிறை வாழ்வை வழங்க வந்துள்ளார் என அறியத் தருகிறார்.

ஆதியிலே தண்ணீரின் மீது இறை ஆவியார் அசைவாட அனைத்து உலகப் படைப்புகளும் தோன்றியது போல புதிய ஒரு உலகை இயேசு உருவாக்குவதும் இந்த கானாவூரின் தண்ணீரில் தொடங்குகிறது.

மணவீட்டார் திகைத்தார்
அன்னை மரியா சிரித்தார்
குணமிக்க நல்லோர் போல
கோப்பையில் வார்த்து சுவைத்தார்
கணம் தோறும் சுவையை ஊட்டும்
கருணையின் இரசத்தை அருந்தி
மணம் முடித்த ஆண் பெண் யாவரும்
மணமக்கள் போல நின்றார்
மரியதாய் வேண்டிடவே
இயேசு அரும் புதுமை செய்தார்
நீரை மாற்றியே இயேசு
நம் வாழ்வையும் மாற்றினார்
மரியே எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளும்.

# என்றுமே நன்மை செய்பவர்

**அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)**

"அன்பருக் கன்பனான மெய்யன் ஐயன்
ஆனந்த மோனன் அருட்குருநாதன்"
-தாயுமானவர்.

என்றுமே நன்மை செய்பவராய், எல்லோரையும் அன்பு செய்பவராய் இருப்பவரே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. நன்னயம் செய்வோருக்கு மட்டுமன்றி இன்னா செய்வோருக்கும் நல்லவராய் இயங்குபவரே இவர்.

ஏழை ஒருவர் மிகவும் பசியுற்ற நிலையில் அரண்மனை மாதோட்டத்துள் புகுந்து, மாமரம் ஒன்றிற்கு கல்லால் எறிந்தான். இரண்டு மாங்கனிகள் அவனுக்குக் கிடைத்தன. அதேவேளை தற்செயலாக அங்கு நின்ற அரசனின் தலையை அவன் எறிந்த கல் காயப்படுத்திற்று. காவலர்கள் அவனைப் பிடித்து அரசனிடம் கையளித்து தக்க தண்டனை கொடுக்குமாறு கோரிக்கை விடுத்தார்கள். அரசனோ புன்சிரிப்புடன், தன்மேல் கல்லெறிந்த அவனுக்கு மாமரம் இரண்டு மாங்கனிகள் கொடுத்துவிட்டது. இம்மாமரத்தையும்விட மிகவும் மேலானவனாகிய நான் என் தகுதிக்கு ஏற்றவாறு பரிசு கொடுக்கவேண்டாமா? என்று கூறி கல்லால் எறிந்து தன்னைக் காயப்படுத்திய அந்த ஏழைக்கு நிறையப் பரிசுகள் கொடுத்து அனுப்பினான். ஏழை மனிதன் மிகவும் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினார்.

இந்த அரசனையும்விட மிகவும் மேலான முறையிலே இயேசு எம்மேல் அன்பு கொண்டவராக, பரிவு காட்டுபவராக இருக்கிறார்.

ஒருமுறை இயேசு பரிசேயன் சீமோனது வீட்டிற்கு விருந்தாளியாகச் சென்றார். அவ்வேளை பாவிப் பெண்ணொருத்தி, இயேசு அங்கிருப்பதை அறிந்தவளாய் செல்கின்றாள். இயேசுவிற்குப் பின்னால் கால்மாட்டில் வந்து அவள் அழுது கொண்டே நின்றாள். அவரது காலடிகளைத் தன் கண்ணீரால் நனைத்து, தன் கூந்தலால் துடைத்து தொடர்ந்து முத்தமிட்டு அவரது காலடிகளில் நறுமணத் தைலம் பூசினாள்.

இதைக்கண்ணுற்ற சீமோனோ இயேசுவைத் தவறாகப் புரிந்து கொண்டார். இயேசு அவரைப் பார்த்து "சீமோனே, நான் உமக்கு ஒன்று சொல்ல வேண்டும்" என்றார். அதற்கு சீமோன் "போதகரே சொல்லும்" என்றார். அப்பொழுது இயேசு "கடன் கொடுப்பவர் ஒருவரிடம் ஐந்நூறு தெனாரியமும் மற்றவர் ஐம்பது தெனாரியமுமாக இருவர் கடன்பட்டிருந்தனார். கடனைத் தீர்க்க அவர்களால் முடியாமல் போகவே இருவர் கடனையும் அவர் தள்ளுபடி செய்து விட்டார். இவர்களுள் யார் அவரிடம் மிகுந்த அன்பு செலுத்துகிறார்?" என்று கேட்டார்.

சீமோன் மறுமொழியாக, "அதிக கடனை யாருக்கு தள்ளுபடி செய்தாரோ அவரே என நினைக்கின்றேன்" என்றார். இயேசு அவரிடம் "சொன்னது சரியே" என்றார்.

அவர் பின்பு அப்பெண் பக்கம் திரும்பி சீமோனிடம், "இவரைப் பார்த்தீரா? நான் உம்முடைய வீட்டிற்கு வந்தபொழுது நீர் என் காலடிகளை கழுவ தண்ணீர் தரவில்லை. இவரோ தம் கண்ணீரால் என் காலடிகளை நனைத்து அவற்றைத் தமது கூந்தலால் துடைத்தாள். நீர் எனக்கு முத்தம் கொடுக்கவில்லை. இவரோ நான் உள்ளே வந்ததும் முதல் என் கால்களை ஓயாமல் முத்தமிட்டுக் கொண்டே இருக்கிறார். நீர் எனது தலையில் எண்ணை பூசவில்லை. இவரோ என் காலடிகளில் நறுமணத்ததைலம் பூசினார். ஆகவே நான் உமக்குச் சொல்கின்றேன். இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார்"

(லூக் 7:36-47).

இயேசு சென்ற இடமெல்லாம் நன்மை செய்துகொண்டே சென்றார். மனிதனுக்கு நலம் கொடுப்பதிலேயே அவரது பேச்சும் மூச்சும் இருந்தது. அவரது சிந்தனை சொல், செயல், அவரது வாழ்க்கை முறை அனைத்தும் மனித நலத்தை மனித இரட்சிப்பை மையப்படுத்தியதாய் இருப்பதை நாம் அவதானிக்கலாம். அவர்கள் மறுகரைக்குச் சென்று கெனசேரத்து பகுதியை அடைந்து படகைக் கட்டி நிறுத்தினார்கள். அவர்கள் படகைவிட்டு இறங்கிய உடனே மக்கள் இயேசுவை இன்னார் என்று கண்டுணர்ந்து அச்சுற்றுப்பகுதி எங்கும் ஓடிச்சென்று அவர் இருப்பதாகக் கேள்விப்பட்ட இடங்களில் எல்லாம் நோயாளர்களை படுக்கையில் கொண்டு வரத்தொடங்கினார்கள். மேலும் அவர் சென்ற ஊர்கள், நகர்கள், பட்டினங்கள் அனைத்திலும் உடல் நலம் குன்றியோரை பொது இடங்களில் கிடத்தி அவருடைய மேலாடையின் ஓரத்தையாவது அவர்கள் தொட அனு



மதிக்குமாறு அவரை வேண்டினார்கள். அவரைத் தொட்ட அனைவரும் நலமடைந்தார்கள். (மாற்கு 6:35).

கடவுள் நாசேரத்து இயேசுவின் மேல் தூயஆவியாரின் வல்லமையை பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார் (திருப்பணி. 10:38).

ஆள்பாராமல், நாள்பாராமல் இயேசு என்றும் நன்மை செய்து கொண்டு எல்லோருக்கும் நற்செய்தியாக சென்றார். பதினெட்டு ஆண்டுகளாக பேயினால் நோயுற்றிருந்த கூனிப்பெண்ணை ஒய்வு நாளில் குணமாக்கினார். ஆனால் ஒய்வு நாளில் குணப்படுத்தியதைக் கண்ணுற்ற தொழுகைக் கூட தலைவரோ கோபவெறி கொண்டு மக்கள் கூட்டத்தைப் பார்த்து "வேலை செய்ய ஆறு நாட்கள் உண்டு. அந்நாட்களில் வந்து குணம் பெற்றுக்கொள்ளுங்கள் ஒய்வு நாளில் வேண்டாம்" என்றார்.

ஆண்டவரோ "வெளிவேடக்காரரே நீங்கள் ஒவ்வொருவரும் ஒய்வு நாளில் தம் ஆட்டையோ. கழுதையையோ தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டு போய் தண்ணீர் காட்டுவதில்லையா? பாருங்கள் ஆபிரகாமின் மகளாகிய இவரை பதினெட்டு ஆண்டுளாக சாத்தான் கட்டி வைத்திருந்தான். இந்தக் கட்டிலிருந்து அவரை ஒய்வு நாளில் விடுவிப்பது முறையில்லையா?" என்று கேட்டார்

(லூக்கா. 13:14-17).

சொல்லளவில் நல்லவர்கள் என பெயர் பெற்றுக்கொண்டு செயலளவில் பிறருக்குத் தீங்கு செய்வதில் நல்லவர்களாக திகழ்ந்தார்கள் பரிசேயர்கள்.பரிசேயர்கள் பற்றிய கதை ஒன்று. இந்த உலகில் பத்து நல்லவர்கள் இருக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அவர்களுள் நானும் எனது மகனும் நிச்சயமாக இடம்பெறுவோம். அதேவேளை இந்த உலகத்தில் இரு நல்லவர்கள் உள்ளார்கள் என வைத்துக் கொள்ளுவோம், அப்படியானால் அந்த இரு நல்லவர்கள் நானும் எனது மகனுமாகத்தான் இருக்க முடியும். மேலும் இந்த உலகில் நல்லவர் ஒருவர் தான் உள்ளார் எனில் நிச்சயமாக அந்நல்லவர் நானாகத்தான் இருக்கமுடியும் என்று பரிசேயன் பெருமையகப் பேசிக்கொள்வான். பரிசேய மனப்பான்மையும், பரிசேய செயற்பாடுகளும் இயேசுவிற்கு புறம்பானவையே.

ஒய்வு நாள் அன்று இயேசு பரிசேயர் தலைவர் ஒருவடைய வீட்டிற்கு உணவு அருந்த சென்றிருந்தார். அங்கிருந்தோர் அவரைக் கூர்ந்து கவனித்தனர். அங்கே நீர்கோவை நோயுற்ற ஒருவர் அவர் முன் இருந்தார். இயேசு திருச்சட்ட அறிஞர்களைப் பார்த்து "ஒய்வு நாளில் குணப்படுத்துவது முறையா? இல்லையா?" என்று கேட்டார். அவர்கள் அமைதியாக இருந்தனர். இயேசு அவரது கையைப் பிடித்து அவரை நலமாக்கி அனுப்பி விட்டார். பிறகு அவர்களை நோக்கி "உங்களுள் ஒருவர் தம் பிள்ளையோ மாடோ கிணற்றுள் விழுந்தால் ஒய்வு நாள் என்றாலும் அதனை உடனே தூக்கிவிடமாட்டாரா?" என்று கேட்டார். அதற்கு பதில் சொல்ல அவர்களால் இயலவில்லை (லூக்கா. 14:1-6).

**உள்ளத்தால், உணர்வுகளால் பிறரது நல்வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்வில் இன்பம் கண்டார் இயேசு. மகிழ் வித்து மகிழும் நல்லுள்ளமாக, வாழ்வித்து வாழும் உலக மீட்பராக விளங்கினார் இயேசு.**

## விண்ணக வாழ்வின் 5ம் ஆண்டு நினைவு

அன்னை மடியில்: 03 • 12 • 1949



ஆண்டவர் மடியில்: 09 • 10 • 2013

### அருட்சகோதரி புளோரினா பத்திநாதர்

இரக்கமுள்ள இறைவா!
உம்மையே முழுமையாக அன்பு செய்து
உமது பணிக்காக தனது வாழ்வை அர்ப்பணித்து
ஒரு இறைபணியாளராக தன்னை ஒப்புக்கொடுத்து
வாழ்ந்து, உமது இராட்சியம் தேடி வந்துள்ள
எம் சகோதரி புளோரினாவின் ஆன்மாவுக்கு
முடிவில்லா வாழ்வை அளித்தருளும் உமது பிரசன்னத்தில்
வாழும் எமது ஐயா, அக்கா, உறவுகளோடு
அவர் நித்தியத்திற்கும் மகிழ்ந்திருப்பாரக! ஆமென்.

அளுக்கை,
அளவெட்டி

அருட்பணி. ஜெபரட்ணம் அடிகளாரும்
குடும்பத்தினரும்

## விண்ணக வாழ்வின் 8ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 16 • 08 • 1934



உதிர்வு: 13 • 10 • 2010

### அமரர். யோசப் பிரான்சிஸ்

(குழந்தை)

ஆண்டவரின் இரக்கம்
எத்துணை பெரியது
அவர் அளிக்கும் நிலை வாழ்வு
எத்துணை மேலானது
"சீவியத்தில் நேசித்தவர்களே
இறப்பிலும் என்னை மறவாதீர்கள்"

AD84

இல-7, கடற்கரை வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

பாசமுடன் நினைவு கூரும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 14ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 11 - 04 - 1939



விண்ணில்: 04 - 10 - 2004

அமரர்
### சூசைப்பிள்ளை சாள்ஸ்

பாசத்தை உங்கள் வளர்ப்பிலே - கண்டோம்
தியாகத்தை உங்கள் வாழ்வினிலே - கண்டோம்
உதிரத்தை உழைப்பினிலே - கண்டோம்
உழைப்பில் எம் வாழ்வையே - வாழ்ந்தோம்

கண்ணை இமை காப்பது - போல்
பாலகர் எம்மை அறிவோடு கூடிய நற்பழக்கங்கள்
புன் சிரிப்போடு வளர்த்தீரே! ஐயா! - உம்
புன் சிரிப்பைக் காண ஏங்குகின்றோம்
மழலைகள் நாங்கள்
உங்கள் ஆன்மா இறைவனில் மகிழ்ச்சி கொள்வதாக

5ம் வட்டாரம்
மண்டை தீவு

பாசமுடன்
நினைவுகூரும்
அருட்தந்தை சா.ஜஸ்ரின்
(மகன்)

Ad/82

## தேசிய பொதுநிலையினர் கழக இயக்குநரின் ஆசிச்செய்தி.....

(05ம் பக்கத் தொடர்ச்சி..)

'இறைவனோடு நாம் கொண்டுள்ள நல் உறவே புனிதம்' என புனித அவிலா திரேசா தம் அனுபவத்தினூடாக கற்பிக்கின்றார். புனிதத் தன்மை பற்றி ஒரு தெளிவான, பரந்த கருத்தினை அவர் முன்வைக்கின்றார். அதாவது புனிதர்கள், குருக்கள், துறவியர் மட்டுமல்லாமல் சாதாரன பொதுநிலையினராகிய ஆண்களும், பெண்களும் இப்புனிதத்துவத்தை அடைய ஈர்க்கப்படுகின்றனர், அழைக்கப்படுகின்றனர். இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் "திருச்சபை" (Luman Gentium) என்கின்ற அதிகாரத்தில் பொதுநிலையினர் பற்றி குறிப்பிடும் போது, பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்புக்களாக அடையாளம் காணப்படுகின்றனர்.

திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், அதனை புனிதப்படுத்தவும், திருச்சபைக்காக உழைக்கவும் படைத்தவரும், மீட்பருமான இறைவன் வலிமையை தருகின்றார். வத்திக்கான் திருச்சங்கமானது, பொது-நிலையினர் வாழ்வில் திருப்பலி, அருட்சாதனங்கள், செபம், ஒறுத்தல், சகோதர அன்பு, கிறிஸ்தவ விழுமியங்கள், நற்பண்புகள் ஆகியவற்றை தூய்மைப் படுத்தும் கருவிகளாக அடையாளம் காட்டுகின்றது. இயேசு கிறிஸ்துவில் நாம் ஏற்கனவே தூய்மையாய் இருக்கின்றோம். இறை வெளிப்பாட்டிற்கு விசுவாசத்தோடு பதிலளித்த அனைவரும் இயேசுவோடு இணைக்கப்பட்டிருக்கின்றனர். கிறிஸ்தவராக வாழ்வதென்பது வெறுமனே இறைவனில் நம்பிக்கை வைப்பது மட்டுமல்ல. மாறாக தூய ஆவியானவருக்குள் இயேசுவோடு இணைந்திருப்பதாகும். நாம் நமது குடும்ப வாழ்விற்கு அடுத்தப்படியாக எமது வேலைத்தளங்களில் அதிக பயனுள்ள நேரத்தை செலவிடுகின்றோம். இயேசு கிறிஸ்துவை கண்டு, அவரை அனுபவிக்க விரும்புகிற ஏனைய கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கர் அல்லாத சகோதர சகோதரிகளையும் சந்தித்து உறவாட தத்தமது வேலைத்தளம் ஓர் சிறந்த இடமாக அமைகின்றது.

பொது நிலையினர், தாம் தொழில் புரியும் இடங்களில் நன்கு உய்த்துணர்ந்து தைரியத்தோடும், தாழ்மையோடும் தாம் சந்திக்கின்ற சக ஊழியர்களோடு இறை விசுவாசத்தை பகிர்ந்து வாழ அழைக்கப்படுகின்றனர். திருமுழுக்கு பெற்றுள்ள நாம் அனைவரும் திருச்சபையின் திருத்தூது பணியில் பங்குபெற கடமைப்பட்டிருக்கின்றோம். எனவே பொதுநிலையினர் அனைவரும் இன்றைய உலகில் இறைத்தூய்மையின் கண்ணாடியாக வாழ்வதற்கான இறை அழைத்தலை ஏற்று கிறிஸ்துவுக்கு சான்று பகரும் அர்ப்பணமுள்ள விசுவாசிகளாக வாழ முன்வருவோம்.

## திருமறையில்.....

(05ம் பக்கத் தொடர்ச்சி...)

அவரின் பண்புகளைத் தாங்கிப் பணியாற்ற முன்வரவேண்டும். சிறுவர்கள், இளைஞர், பெற்றோர், ஆசிரியர்கள், மறையாசிரியர்கள் மற்றும் பக்திச்சபை உறுப்பினர்கள் என்ற ரீதியில் குடும்பம், திருமறை சமூகம் சார்ந்த கடமைகளையும் பொறுப்புக் களையும் பிரமாணிக்கமாக ஆற்றுவதன் ஊடாக நாம் இறையாட்சிக்கு சான்றுபகர முடியும். அத்துடன் இறைவன் எமக்குத் தந்துள்ள ஆற்றல்கள், திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் அவற்றை இறைமகன் இயேசு கொண்டுவர விரும்பிய இறையாட்சிக்காகப் பயன்படுத்துவதும் மிக முக்கியமானதாகும். (மத். 25:14-30)

### பணிவாழ்வில் சவால்கள்

இறைமகன் இயேசுவின் சீடத்துவத்துக்கு சான்று பகர்ந்து வாழ்வது என்பது மிகவும் கடினமா-னதும், சவால்கள் நிறைந்ததும் ஆகும். வானகத் தந்தையோடு எப்போதும் செபத்திலே இணைந்திருந்து உண்மையாகவே அவர் சித்தத்தையும், மீட்புத் திட்டத்தையும் நிறைவேற்ற பிரமாணிக்கமாக உழைத்த இயேசு சந்தித்த சவால்கள் ஏராளம். அதனால்தான் கிறிஸ்து எழுபத்தி இரண்டு சீடர்களை தன் திருத்தூதுப் பணிக்கு அனுப்பும்போது "புறப்பட்டுப் போங்கள் ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவது போல் உங்களை நான் அனுப்பு கின்றேன்" (லூக்.10:3) என்று யதார்த்தத்தை உணர்ந்தவராகக் கூறுகின்றார். எனவே எமது பொதுக்குருத்துவ சீடத்துவப் பணிவாழ்வில் வரும் சவால்களை வெற்றிகொள்ள செபத்தில் நிலைத்திருப்பதோடு, நீரோடையில் நடப்பட்ட விருடம்சம்போலவும், கிறிஸ்துவோடு இணைந்திருந்து நற்கனிகள் கொடுக்கும் கிளை-களைப் போலவும் சாட்சியமாக வாழ்ந்தால் எமது பணிகளில் நாம் வெற்றியடைய முடியும்.

### நிறைவாக

கொண்டாடப்படுகின்ற தேசிய பொதுநிலையினர் தினம் இன்றோடு முடிந்து போகாமல் ஒவ்வொரு தினமும் பொதுநிலையினர் தினமாக அமையுமாறு பணிபுரிவோம். எமக்கென்று பல பணித்தளங்கள் தரப்பட்டாலும் குடும்பத்தில் சாட்சிய வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கும்போது அது விலைமதிப்பற்றதாக மாறும். திருச்சபையில் குடும்பம் ஒரு முக்கிய அலகாக இருப்பதால் குடும்பத்தில் கிறிஸ்துவை மையப்படுத்துவோம். இன்றைய நாளில் எமக்குத் தரப்படுகின்ற நல்ல கருத்துக்களையும் வாழ்வுக்கான கிறிஸ்தவ மதிப்பீடுகளையும் வாழ்வதன் மூலம் எமது பணிகளுக்கு ஒரு உத்வேகம் கொடுத்து இறைமகன் இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்குவோம்.

## விண்ணக வாழ்வில் 18ம் ஆண்டு நினைவு

மலர்வு: 03 • 07 • 1985



உதிர்வு: 07 • 10 • 2000

அமரர்
### அமலதாஸ் கமிலஸ் கிரிஸ்ரி

(முயல்)

மயிலை மண்ணில் அமைதியான குடும்பம்
அதில் அழகான பூக்களின் மொட்டுகள் மூன்று
ஒன்று மொட்டிலே உதிர்ந்தது மற்றது மலர்ந்து
மணம் வீச முன் பறிக்கப்பட்டது
ஒற்றைப்பூவின் அழகில் உதிர்ந்த பூக்களின் நினைவில்
இன்றும் குடும்பம் ஏக்கத்துடன்
இறைவனில் அமைதி வேண்டி
பிரார்த்திக்கின்றோம்.

AD80

தற்போதைய முகவரி
சக்கோட்டை

அப்பா, அம்மா
அண்ணா, அண்ணி, பிள்ளைகள்




யாழ் / நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாட-சாலையில் 2018 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்

### செல்வி. சாம்சன் கஜேந்தினி


165 புள்ளிகள் பெற்று
சித்தியடைந்துள்ளார்.

அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருக்கு கற்பித்த அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் ஆசிரியர்களையும் நன்றியுடன் நினைக்கிறோம்.

வாழ்த்துவோர்
அப்பப்பா அப்பம்மா,
சித்தப்பாமார்கள் (அருண்சிங்,
டேமியன், பகிரன்)
அத்தைமார்கள் (தனு, சர்மிலா)

Ad/86

## குருத்துவ பொன் விழா பாராட்டு



அருட்பணி. பிரான்சிஸ் டானியல்

(அ.ம.தி)

(1968 - 2018)

AD84

இறை அர்ப்பண வாழ்வில் அகவை ஐம்பதை நிறைவு

செய்துள்ள அருட்பணி பிரான்சிஸ் டானியல் அ.ம.தி (தம்பிச்சுவாமி)

அவர்களை அன்போடு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தொடர்ந்தும் உடல் உள நலத்தோடு இறைபணியாற்ற

இறையாசீர் வேண்டுகின்றோம்.

-குடும்பத்தினர்-

## வெள்ளி விழா வாழ்த்துக்கள்

அருட்தந்தை அரசரத்தினம்
எரிக் றொஷான்

1993.10.16

2018.10.16



"நீர் ஆண்டவரை உம் புகலிடமாய்க் கொண்டீர்
உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர்
ஆகவே தீங்கு உமக்கு நேரிடாது
வாதை உம்மை நெருங்காது
நீர் செல்லும் இடமெல்லாம் உம்மை காக்கும்படி,
தம் தூதருக்கு அவர் கட்டளையிடுவார்".

AD81

தமது குருத்துவப் பணியில் 25 வருடத்தைப் பூர்த்தி செய்து வெள்ளி விழாக் காணும் அருட்தந்தையை மனமார வாழ்த்துவதோடு அவரது பணி தொடர செபித்து நிற்கின்றோம்

குணரத்தினம் குடும்பம்

## சாவகச்சேரி பங்கு இளையோரின் குறும்பட இறுவெட்டு வெளியீடு



யாழ் மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட குறும்படப் போட்டியில் 3ம் இடத்தைப் பெற்றுக்கொண்டசாவகச்சேரி பங்கு இளையோர் ஒன்றியத்தின் "வெளிச்சம்"குறும்பட இறுவெட்டு கடந்த புரட்டாதி மாதம் 30ம் திகதி வெளியிட்டு வைக்கப்பட்டது.

சாவகச்சேரி கத்தோலிக்க ஒன்றியத் தலைவர் திரு.அ.எமிலியன்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் பங்குத்தந்தை அருட்பணி. ம.றெக்ஸ் சவுந்தரா அடிகளார் ஆசியுரை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு யாழ் மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி. அ.அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் முதன்மை விருந்தினராகவும். போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு மையத் தலைவர் திரு. க. அருந்தவபாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். ஆய்வுரை பத்திரிகையாளர் திரு. த.பிரபாகரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. போதைப் பொருள் பாவனையால் சீரழிந்த குடும்பத்தின் கதையை 'வெளிச்சம்' குறும்படம் வெளிக்கொணர்ந்துள்ளது.

## ஊறணி அந்தோனியார் பங்கில் புதிய குருமனை திறப்பு விழா



காங்கேசன்துறை ஊறணிப் பங்கு கடந்த பல ஆண்டுகளாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டது. அங்கு தற்காலிகமாக அமையப்பெற்ற புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த ஒன்றரை வருடங்களாக பங்குப் பணித்தளக் குருமனை இல்லாமையால் பெரும் சிரமங்களின் மத்தியில் அருட்பணியாளர்கள் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

அருட்பணி ராஜன் அவர்கள் பங்குக் குருவாக பணிப் பொறுப்பெடுத்து கடந்த 08 மாதங்களின் பின்னர் யாழ் ஆயரின் அனுசரணையுடன் புதிய குருமனை அமைக்கப்பட்டு 14.10.2018 ஞாயிற்றுக்கிழமை (இன்று) பிற்பகல் 4.00 மணிக்கு யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரால் திறந்து வைக்கப்படுகின்றது.

இப்பகுதியில் அமைந்திருந்த மயிலிட்டி காணிக்கைமாதா ஆலயம், பலாலி செபஸ்தியார் ஆலயம் என்பன யுத்த அனர்த்தம் காரணமாக தரைமட்டமாக்கப்பட்ட நிலையில் மக்களும் இதுவரை மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை. இதனால் ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்தே அண்மையில் விடுவிக்கப்பட்ட ஊறணி, பலாலி, வளலாய், முலவை, வள்ளுவர்புரம் போன்ற பகுதிகளுக்கு மேய்ப்புப்பணி ஆற்றப்படுகின்றது.

## முல்லைத்தீவு மறைக்கோட்ட மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வு

முல்லைத்தீவு மறைக் கோட்ட மறையாசிரியர்களுக் கான ஒன்று கூடலும் கருத்த மர்வும் முல்லைத்தீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் 2018.09.24 ஆம் திகதி மறைக் கோட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி மரியதாஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி அ.பெ.பெனட் அடிகளார், முல்லைத்தீவு மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்பணி எஸ்.ஏ.ஜோர்ஜ் அடிகளார் மற்றும் பங்குகளின் பங்குத்தந்தையர்களும் கலந்து கொண்டனர்.

கருத்துரையை கிளரேசியன் சபையை சேர்ந்த அருட்பணி அருளராஜ் அடிகளார் நிகழ்த்தினார்.

## ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் அங்குரார்ப்பணம்

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் 07.10.2018 அன்று பங்குத்தந்தை அருட்பணி றோய் பேடினன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஆசிரியர் சங்கத்தின் தலைவராக திரு.ச.ஜெயானந்தன் அவர்களும், செயலாளராக திருமதி. வனஜா றொபேட் கெனடி ரட்ணராஜா அவர்களும், பொருளாளராக திரு.ஞா.காண்டீபன் அவர்களும், உப தலைவராக திரு.எஸ்.விமலகாந்தன் அவர்களும், உப செயலாளராக திருமதி. இராசகுமாரி ஜெயசீலன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**புனித யோசவ் வாஸ் சிலுவைப் பயணத்தில் சிறு மாற்றம்**

**20.10.2018**

மு.ப 8.30 - 10.00 மணி வரை இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெறவிருந்த திருச்சிலுவை ஆராதனை அங்கு நடைபெறாது பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## துயர்பகிர்கின்றோம்



திருமறை கலாமன்றத்தின் மூத்த கலைஞரும் ஈழத்தின் அரங்க புலத்தில் அரை நூற்றாண்டுக்கு மேல் பணியாற்றிய வருமான ஜி. பி. பேர்மினஸ் அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார். இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக பிரார்த்திப்பதுடன் இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் பாதுகாவலன் குழுமம் துயர்பகிர்ந்து நிற்கின்றது.


ஆசீர் வணிக நிலையம்



அனைத்துவிதமான ஸ்ரேசனறிகளையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

TEN NATARAJ BOSS Atlas RATHNA EXERCISE BOOKS

Aseer Vaniga Nilayam



220 A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் | 220 A, K.K.S Road, Jaffna

021 222 5485 021 222 5485

மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவுடன்


இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.